வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 08.10.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 307 | பக்கங்கள் : 16

# மாகாண அதிகாரங்களில் 50வீதம் பறிக்கப்பட்டுவிட்டது

## பாராளுமன்றத்தில் த. தே. கூட்டமைப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 08

13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களில் 50 வீத அதிகாரங்கள் மீண்டும் பறிக்கப்பட்டு விட்டதாகத் தெரிவித்த தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க எடுக்கப்படும் நடவடிக்கையே தேரு நர்களை பதிவு செய்தல் திருத்த சட்ட மூலம் எனவும் குற்றம் சாட்டினார்.

02



# வடக்கு ஆளுநராக ஜீவன் தியாகராசா

கொழும்பு, ஒக். 07

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக ஜீவன் தியாகராசா நியமிக்கப்பட்டுள்ளார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் எதிர்வரும் புதன்கிழமையின் பின்னர் ஆளுநர் பதவியை பொறுப்பேற்

15

# மேலும் 44 பேர் தொற்றுக்கு பலி!

கொழும்பு, ஒக். 08

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 229 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 44 பேரில் 19 பெண்களும் 25 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# பின்னடைவை சமாளிப்பதற்கு பணி புரிவதற்கு தயாராகுங்கள்

## மாவட்ட செயலர்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 08

கொவிட் தொற்றுப் பரவல் காரணமாகக் கடந்த இரண்டு ஆண்டுகளில் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட பின்னடைவுகளைச் சமாளிக்க, புதிய பொதுமைப்படுத்தலின் கீழ், புது உத்வேகத்துடன் பணியாற்றத் தயாராகுமாறு, மாவட்ட செயலாளர்களுக்கு, ஜனாதிபதி

15

# உயர்தர, புலமைப்பரிசில் பரீட்சைகள் ஒத்திவைப்பு!

கொழும்பு, ஒக். 07

எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தப்படவிருந்த தரம் ஐந்து புலமைப்பரிசில், ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சைகளை மீண்டும் ஒத்தி வைக்கப்படுகின்றன. பரீட்சைகளுக்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று கல்வி சீர்திருத்தம், திறந்த பல்கலைக்கழகங்கள், தொலைக்கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரி

15

# 'ஈழநாடு' நிலைப்பாட்டை கண்டிக்கிறார் கஜேந்திரகுமார்

கொழும்பு, ஒக். 08

தமிழர் பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக்குள் தீர்வினை வழங்கக்கூடிய எந்தவொரு யோசனையையும் இந்தியா முன்வைக்கக்கூடாது என்று அந்நாட்டு வெளியுறவுச்செயலர்

15

## ஈழநாடு ஆசிரியர் தலையங்கம் தொடர்பில்...

கடந்த 5.10.2021 அன்று, ஈழநாட்டில் வெளியான, "யார் வல்லசுகளின் முகவர்கள்" - என்னும் தலைப்பிலான ஆசிரியர் தலையங்கம் தொடர்பில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட

15

### 19 வயது இளம்பெண் உட்பட

# யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இருவருக்கு கொரோனா உறுதி!

யாழ்ப்பாணம், ஒக். 08

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த நபர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் ஒருவர் 19 வயதுடைய இளம் பெண் என்று மருத்

15

# 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் டோஸாக பைசர் தடுப்பூசி!

கொழும்பு, ஒக். 08

20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனா தொற்று நோய் தடுப்பூசியான பைசரை பூஸ்டர் டோஸாக வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

"இது தொடர்பில் சுகாதார சேவைகள்

15

# தென்மராட்சியில் மீண்டும் கொரோனா தொற்று உயர்வு

## நேற்று 11 பேருக்கு உறுதி

தென்மராட்சி, ஒக். 08

தென்மராட்சியை சேர்ந்த மேலும் 11 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பி. சி. ஆர். அன்ரிஜென் பரிசோதனைகளிலேயே நேற்று இந்தத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இவர்களில், 8 பேர்

15



# இப்படியும் நடக்கிறது...!

பாராளுமன்றத்தை அதன் உறுப்பினரானமையை சரியாகப் பயன்படுத்துவதில் என்றும் முன்னுக்கு இருப்பவர் நமது உறுப்பினர் ஒருவர் என்பது நமக்கு பெருமைக்குரியதுதான்.

பாராளுமன்றத்தில் அதிகநாட்கள் உயைாற்றியவர்- அந்தப் பெருமைக்குரியவர் நமது சிவஞானம் சிறிதரன் அவர்கள்தான்.

அவர் அண்மையில் சுகாதர அமைச்சரிடம் வாய்மொழி மூல பதிலுக்காக கேட்ட கேள்வி ஒன்றுக்கு, சுகாதார அமைச்சர் அளித்த பதில் ஆச்சரியத்திற்குரியது.

அந்தச் செய்தி நிச்சயம் எல்லோரையும் ஆச்சரியப் படுத்தியிருக்கும்.

கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரியில் பணியாளர்கள் பற்றிய சிறிதரனின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த சுகா தார அமைச்சர்,

“கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அங்கீகரிக் கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 519 ஆக உள்ள நிலையில் 419 ஊழியர்களே பணியில் உள்ளனர். இவர்களில் 65 வீதமானோர் சிங்களம், ஆங்கிலம் மட் டுமே பேசக்கூடியவர்கள். 35 வீதமானவர்கள் மட்டுமே தமிழ், ஆங்கிலம் பேசக்கூடியவர்கள்” என்றார்.

கிளிநொச்சி மாவட்டம் முழுக்க முழுக்க நூறுவீதம் தமிழ் பேசும் மக்கள் மட்டுமே வாழ்கின்ற ஒரு மாவட் டம். அப்படியிருக்கையில் இவ்வாறு தமிழ்தெரியாத பணியாளர்கள் நியமிக்கப்படுவது எந்தவகையில் நியாயமானது என்று சிறிதரன் பதில்கேள்வி எழுப்பிய தும் நியாயமானதே.

சிறிதரனைப் பொறுத்தவரை அவர் ஒரு மக்கள் செல் வாக்குள்ள தலைவர். கூட்டமைப்பு கடந்த தேர்தலில் பாரிய பின்னடைவைச் சந்தித்தபோதிலும் சிறிதரன் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றவர்.

வசீகரமான அரசியல் தலைவர் என்பதை கடந்த இரண்டு தேர்தல்களிலும் நிரூபித்து வருபவர்.

அரசிடம் இந்தக் கேள்வியைக் கேட்டது எவ்வளவு நியாயமானதோ, அதேபோலவே அவர் நமது மக்களி டம் நியாயமான சில கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

கிளிநொச்சி மருத்துவமனையில் எத்தனை பேர் தமிழ் தெரிந்த பணியாளர்கள் என்று கேட்டதுபோல களுத் துறை, பாணந்துறை போன்ற இடங்களிலுள்ள மருத்து வமனைகளில் எத்தனை பேர் சிங்களம் தெரியாத மருத்து வர்கள் இருக்கிறார்கள் என்பதையும் கேட்டிருந்தால் ஒரு உண்மை தெரிய வந்திருக்கும்.

அதாவது நமது தமிழ் மருத்துர்கள் பலர் நமது மண் ணில் பணியாற்ற விரும்பாமல் களுத்துறையிலும் பாணந் துறையிலும் பணியாற்ற ஏன் விரும்பிச் செல்கிறார்கள் என்பதை ஆராய முற்படவேண்டும்.

அதுமாத்திரமன்றி, இலவசக் கல்வியின் முழுப்பலனை யும் பெற்று - நமது நாட்டில் கல்விகற்றுவிட்டு, மருத்து வர்கள் ஆனதும் நமது மருத்துவர்கள் எத்தனைபேர் நமது நாட்டிலேயே இருந்து பணியாற்ற வேண்டும் என்று விரும்பிகிறார்கள். எத்தனை பேர் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

மருத்துவர்களின் நிலைமைதான் இப்படியென்றால், தாதியர் பயிற்சிக்காக விண்ணப்பிக்க நமது மக்கள் விரும்பாததற்கு காரணம் என்ன என்பதை கண்டறியவும் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் சிறிதரன் கவனம் செலுத்தவேண்டும்.

தாதியர் பயிற்சிக் கல்லூரியில் ஆட்சேர்ப்புக்கு விஞ் ஞான பாடத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும். நம்ம வர்கள் விஞ்ஞானத்துறையில் கல்வி கற்பதை ஏனோ நாட்டம் கொள்வதில்லை. அதனால்தான் யாழப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் பெரும்பான் மையின மாணவர்கள் அதிகமாகக் கல்வி கற்றுக்கொண் டிருக்கின்றனர்.

இந்நிலையில் தமிழ் தெரிந்த தாதியர் நியமிக்கவேண் டும் எனில் சிங்கள தாதியர் தமிழ் கற்க வேண்டிய நிலைமையே ஏற்படும்.

மக்கள் செல்வாக்குள்ள சிறிதரன் போன்ற தலைவர் கள், அதுவும் கல்விச் சேவையில் பணியாற்றிய அனுபவ முள்ள முன்னாள் கல்லூரி அதிபரான சிறிதரன், நமது மாணவர்கள் விஞ்ஞானத் துறையில் கல்வி கற்பதை ஊக்குவிக்கவேண்டும். அதேபோல, ஆகக் குறைந்தது வடக்கு - கிழக்கை சேர்ந்த மருத்துவர்களையாவது வடக்கு - கிழக்கில் பணியாற்றவேண்டும் என்று கோரிக்கை விடுக்கவேண்டும்.

பட்டம் பெற்றதும் வெளிநாடுகளுக்கு பறக்காமல் சில வருடங்களாவது நமது மண்ணில் பணயாற்றவேண்டும் என்று கோரிக்கை விடுக்கவேண்டும்.

இவை நடக்காதவரை, தெற்கில் இருந்து வருகின்ற பணியாளர்களை வரவேற்பதைத் தவிர வேறு மார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை.!

- ஊர்க்குருவி

# முன்பள்ளி ஆசிரியர்கள் மதிப்பளிப்பு

சரசாலை வீரமாகாளி அம் பாள் அறப்பணி நிதியம், ஆசிரி யர் தினத்தில் லண்டன் ஞானம யம் வேதாகம அக்கடமி முதல் வர் பிரம்மஸ்ரீ கல்யாண்ஜி குருக்களின்ஆதரவுடன் முன் னெடுத்த முன்பள்ளி ஆசிரியர் களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை சரசாலை வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தென்ம ராட்சி பிரதேசத்தை சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 28 முன் பள்ளி ஆசிரியர்கள் கௌரவிக்கப் பட்டனர்.

ஆலய அறப்பணி நிதியச் செயலர் அதிபர் வை. விஜய குமாரன் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் செயல் திட்ட ஒருங்கிணைப்பாளரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வருமான ச.லலீசன், தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல் விப் பணிப்பாளர் சரோசாதேவி அரியநாயகம், ஆலய அறப்பணி நிதிய உறுப்பினர்களான அ. பிறே மதாஸ், கீ. சுலோஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

## மாகாண...

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற தேருநர்களை பதிவு செய்தல் திருத்த சட்ட மூலம் மீதான விவா தத்தில் உரையாற்றுகை யிலேயே இவ் வாறு தெரிவித்த சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தொடர்ந்தும் பேசுகையில்,

வடக்கு மாகாணத்துடன் தொடர்பில் லாத சில கிராம சேவகர் பிரிவுகளை வடக் குடன் இணைக்குமாறு ஜனாதிபதி அறி வுறுத்தியுள்ளார். இது வடக்கின் இனவிகி தாசாரத்தை மாற்றியமைக்கும் முயற்சி. தேருநர்களை பதிவு செய்தல் திருத்த சட்ட மூலத்தின் மூலம் இவ்வாறான இனவிகி தாசாரங் களை மாற்றும் நடவடிக்கை களே முன்னெடுக்கப்படப்போ கின்றன. குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாணங்களின் இன விகிதாசாரத்தை இச் சட்ட மூலத்தி னால் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக் கப்படும்.

இவ்வாறான நடவடிக்கை கள், குடி யேற்றங்கள், நில ஆக் கிரமிப்புகளை மாகாண சபை கள் மூலமாகவே தடுத்து நிறுத்த முடியும் .அதனால் தான் மாகாண சபைகளின் ஆட்சிக் காலம் முடிவடைந்து 3 வருடங் களாகின்ற போதும் அவற்றுக் கான தேர்தல்களை நடத்தாது இனவிகிதா சாரங்களை மாற்றும் நடவடிக்கைகளில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

கடந்த அரசின் காலத்தில் எதிர்க்கட்சி யில் இருந்த தற் போதைய அரசு மாகாண சபைகளுக்கான தேர்தலை ஏன் நடத்தவில் லையென பல தட வைகளை கேள்வி எழுப்பியது. ஆனால், ஜனாதிபதியாக கோட் டாபய ராஜபக்ஷ பதவியேற்று இன்னும் ஒரு மாதத்தில் இரு வருடங்களை பூர்த்தி செய் யப்போகின்றார். அவரிடம் மூன்றில் இரண்டு பெரும் பான்மை பலம் உள்ளது. உச்ச பட்ச நிறைவேற்றதிகாரம் உள் ளது. இவ்வாறான நிலையில் ஏன் இந்த அரசால் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியாமல் உள்ளது?

13 ஆவது திருத்த சட்டம் கொண்டு வரப்பட்டு 33 வருடங்களாகி விட்டன. இந்த திருத்த சட்டம் மூலம் அப் போது மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதி காரங்களில் 50 வீத அதிகாரங்கள் இப் போது மீண்டும் பறிக்கப்பட்டு விட்டன. இலங்கை-இந்திய ஒப்பந்தம் மூலம் கொண்டுவந்த 13 ஆவது திருத்த சட் டத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலையிலேயே இலங்கை அரசுகளும் இந்திய அரசுகளும் உள்ளன. இந்த திருத்த சட் டத்தை நடைமுறைப்படுத்த 33 வருடங்களாக ஏன் முடிய வில்லை என்ற கேள்வியை இலங்கை-இந்திய அரசு களிடம் முன் வைக்கின்றேன் - என்றார்.

கல்வி TV CHANNEL-1

**08.10.2021**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி TV CHANNEL - 2

**08.10.2021**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | சிங்களம் |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | சிங்களம் |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
08.10.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# தமிழ் கட்சிகள் ஒரு பொது புள்ளியில்?

இந்திய வெளிவிவகார செயலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்த போது, ஒரு விடயத்தை வலியுறுத்தியிருக்கின்றார். இது ஏற்கனவே இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்த விடயம்தான். அதாவது, ஆகக்குறைந்தது 13ஆவது திருத்தச் சட்ட விவகாரத்திலாவது நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். உண்மையில் இதன்மூலம், புதுடில்லி கூறவரும் விடயம் முக்கியமானது. அதாவது, நீங்கள் அவ்வாறு கருத்தொருமித்து நிற்காவிட்டால் எங்களால் பேசுவதற்கு அப்பால் எதனையும் செய்ய முடியாது. வழமைபோல் தமிழ் மக்களின் கௌரவம் - சமத்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று கூறுவதைத் தவிர, வேறு எதனையும் செய்ய முடியாது. ஏனெனில், பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கே தங்களுடைய விடயங்களில் அக்கறையில்லாவிட்டால், வெளியாரால் என்ன செய்ய முடியும்? இந்தக் கேள்வியின் அடிப்படையில்தான் புதுடில்லி தொடர்ந்தும் தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக விடயங்களை கையாள வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றது.

இப்போதும் திருகோணமலையை சேர்ந்த இரண்டு மதத் தலைவர்களின் தலைமையில் கட்சிகளின் ஒற்றுமை தொடர்பில் ஓர் அறிக்கை அண்மையில் வெளியாகிருந்தது. ஆனால், வடக்கு - கிழக்கில் கட்சிகளை ஒன்றுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் அனைவருமே தோல்வியடைந்திருக்கின்றனர். தோல்விக்கும் அப்பால், கட்சிகளை ஒன்றுபடுத்தப் போவதாகக்கூறி மேற்கொள்ப்பட்ட முயற்சிகள் அனைத்துமே, கட்சிகளிடையே மேலும் பிளவுகளையே ஏற்படுத்தியிருக்கின்றது.

இதற்கு தமிழ் மக்கள் பேரவை மிகவும் சிறந்த உதாரணம். தமிழ் மக்கள் பேரவை தொடர்பில் ஆரம்பத்தில் நல்ல வரவேற்பிருந்தது. ஆனால், இறுதியில் தமிழ் மக்கள் பேரவையின் வரவு விக்னேஸ்வரன் தலைமையில் ஒரு புதிய கட்சி உருவாகுவதற்குத்தான் பயன்பட்டது. இதனை அனைவரும் அறிவர். தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகித்த மூன்று அரசியல் கட்சிகளின் தலைவர்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காதவர்களாக, ஒவ்வொரு பக்கங்களில் இருக்கின்றனர். இதே போன்று கடந்த மார்ச் மாதம் மூன்று கட்சிகளை இணைத்து கடிதம் அனுப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் முதலாவது கடிதத்தோடே முடிவுக்கு வந்துவிட்டது.

இந்த நிலையில் கட்சிகளை ஒன்றுமைப்படுத்தப் போகின்றோம் என்று போதிய அனுபவமில்லாதவர்கள், சில முயற்சிகளில் ஈடுபடுவது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தலாம். ஆனால், அண்மையில் ரெலோவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட பொது விடயங்களில் ஒன்றுபட்டு செயல்படுவது தொடர்பான சந்திப்பு, ஒப்பீட்டடிப்படையில் நல்ல முயற்சி. இதன் தொடர்ச்சியாகவே ஐந்து கடசிகள் இணைத்து மனித உரிமைகள் பேரவையின் ஆணையாருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர். இந்த அடிப்படையில், புதுடில்லி விரும்புவது போன்று, 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் ஒன்றுபடக் கூடிய தமிழ் கட்சிகள், அரசியல் செயல்பாட்டு அமைப்புக்கள், புத்திஜீவிகள் அனைவரும் ஓரணியாக செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

அரசியலில் எப்போதுமே சூழ்நிலை கருதி எடுக்க வேண்டிய தீர்மானங்கள் முக்கியமானவை. குறிப்பிட்ட சூழலில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்களை மேற்கொள்ளாது விட்டால், அது பின்னர் ஏற்படப் போகும் அனைத்து பாதகமான விடயங்களுக்குமான அடிப்படையாக அமைந்துவிடும். இதற்கு தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றிலேயே போதுமான உதாரணங்கள் உண்டு. அதேவேளை தீர்மானம் எடுக்க வேண்டிய பொறுப்பிலிருப்பவர்கள் உறுதியான தீர்மானங்களை எடுக்க வேண்டிய தருணங்களில், அமைதியாக இருப்பதும் எதிர்காலத்தில் பல பாதகமான விடயங்களுக்கு காரணமாகும். இதற்கும் தமிழ் அரசியலில் ஏராளமான உதாரணங்கள் உண்டு. எங்களுக்கு போதிய அனுபவங்கள் உண்டு. அந்த அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்டால் நம்மால் மிகவும் இலகுவாக முன்னோக்கி பயணிக்கலாம். புதுடில்லி மீண்டும் வலியுறுத்தியிருக்கும் நிலையிலும் தமிழ் அரசியல் தலைவர்கள் அமைதி காப்பது சரியல்ல. கட்சிகளுக்கிடையிலான இணக்கப்பாடு என்பது, வடிகட்டல்கள் மூலம் ஒருபோதுமே ஏற்படாது. அதாவது, அவர் தேசியவாதி - இவர் தேசியவாதியல்ல - அவர் அரசாங்கத்தின் ஆள் - இவர் நேற்று அங்கிருந்தவர், இப்படியான வரையறைகளுடன் கட்சிகளை ஒரு பொதுப் புள்ளியில் ஒருபோதுமே இணைக்க முடியாது. மேலும் ஒருவரைபற்றி இன்னொருவர் வரையறை செய்யவும் முடியாது. அப்படி செய்வதும் தவறானது.

# 'கோட்டையை கைப்பற்றிய கோட்டாபய'

**- அலசுவது இராஜதந்திரி -**

*இந்திய வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து உரையாடிய போது இந்திய வெளியுறவு செயலாளரிடம் தாம் இராணுவத்தில் பணியாற்றியபோது யாழ்ப்பாண டச்சுக் கோட்டையை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து கைப்பற்றிய யுத்தத்தில் தாம் பங்குபற்றியமையும் ஜனாதிபதி ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.*

*யாழ்ப்பாணம் கோட்டைக்கென ஓர் இரத்தம் தோய்ந்த வாலாறு காணப்படுகின்றது. ஆரம்பத்தில் 1618ஆம் ஆண்டு போர்த்துக்கேயர்களால் யாழ்ப்பாணக் கோட்டை நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் டச்சுக்காரர் 1658இல் யாழ்ப்பாணக் கோட்டையை போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றியிருந்தனர். அத்துடன், அக்கோட்டையை விரிவாக்கம் செய்ததோடு நிர்மாண வேலைகளுக்காக நல்லூர் கந்தசுவாமி கோயிலின் சில பாகங்களை இடித்து அங்கிருந்து அகற்றப்பட்ட கற்களை கோட்டையின் நிர்மாணப் பணிகளுக்காகவும் டச்சுக்காரர்கள் பாவித்திருந்தனர்.*

*1795ஆம் ஆண்டு டச்சுக்காரரிடமிருந்து யாழ்ப்பாணக் கோட்டையை கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் 1948ஆம் இலங்கைக்கு சுதந்திரத்தை வழங்கும் வரை அக்கோட்டையை தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தனர். நட்சத்திர வடிவில் சுற்றிவர ஆழமான அகழிகளுடன் மிக அழகுற அமைக்கப்பட்டதாக யாழ்ப்பாண கோட்டை காணப்பட்டிருந்தது.*

*இதன்பின்னர் 1983ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணக் கோட்டை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது.*

*இந்த ஏழு வருட காலப்பகுதியிலேயே யாழ்ப்பாணக் கோட்டையும் அதனை அண்டிய யாழ்ப்பாணக் கடல்நீரேரி பிரதேசமும் இடையறாத தாக்குதல்களுக்கு உட்படுபவையாகவே இருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாண நகரின் நடுவே செல்கின்ற வீதிக்கு அப்பால் கோட்டையை நோக்கிய பகுதிகளில் தமது பாதுகாப்பு அரண்களை அமைத்து இரவு - பகல் என்றில்லாது கோட்டைக்குள்ளிருந்த இராணுவத்தினர் மீது தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.*

*இதன்காரணமாக யாழ்ப்பாண நகரில் போக்குவரத்து மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் என்பன பெரிதும் முடங்கியிருந்தன.*

*யாழ்ப்பாண கோட்டைக்கு அருகே அமைந்திருந்த வீரசிங்கம் மண்டபம், றீகல் சினிமா தியேட்டர் என்பவற்றையும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது மறைவிடங்களாக பாவித்து கோட்டைக்குள்ளிருந்த ஆயுதப் படையினரை நோக்கி தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.*

*கோட்டைக்குள் இருந்து வெளிவர முடியாத ஆயுதப்படையினர் தமது பாதுகாப்புக்காகவும் தமக்கு தேவையான உணவு , மருந்து மற்றும் ஆயுதங்களுக்கு வேண்டிய வெடிபொருட்களைப் பெறவும் விமானப் படையினரின் விமானங்களையும், ஹெலிகொப்டர்களையுமே பெரிதும் நம்பியிருக்க வேண்டியிருந்தது.*

*மறுபுறத்தே விமானப் படையினரின் சண்டை விமானங்கள் ஹெலிகொப்டர்கள் என்பவை யாழ்ப்பாண கோட்டையை சுற்றி வளைத்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகளை விரட்டியடிக்க இரவு - பகல் என்றில்லாது தமிழீழ விடுதலைப்புலிகளின் மறைவிடங்கள் என்று கண்டறியப்பட்ட பகுதிகளனைத்திலும் குண்டு வீச்சுக்களை மேற்கொண்டிருந்தனர்.*

*அச்சமயங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளும் யாழ்ப்பாணக் கோட்டையை நோக்கி தாழப்பறந்து வந்த விமானப்படை விமானங்கள், ஹெலிகொப்டர்கள் என்பவற்றை நோக்கி தமது நெடுந்தூர சுடுபடைக்கலங்களால் தாக்கியிருந்தனர்.*

*இதேவேளை, யாழ்ப்பாண நகரின் மத்தியில் பொதுமக்களின் நன்மை கருதி மும்முரமான குண்டுவீச்சு மற்றும் ஷெல் தாக்குதல்களின்போது பங்கர்கள் என்றழைக்கப்பட்ட மண்மூடைகளினால் அமைக்கப்பட்ட மறைவிடங்களும் அமைக்கப்பட்டிருந்தன.*

*இருந்தபோதிலும் ஒரு தடவை கோட்டையிலிருந்து ஏவப்பட்ட மோட்டார் ஷெல் ஒன்று யாழ்ப்பாண வைத்தியசாலையின் நோயாளிகள் விடுதிப் பகுதியின் மேற்கூரை மீது வீழ்ந்து வெடித்துச்சிதறியதில் அவ்விடுதி பெரும் சேதத்துக்கு உள்ளாகியிருந்தது. அதிர்ஷ்டவசமாக அங்கிருந்த ஒரு சில நோயாளிகள் பெரும் பாதிப்புகளின்றி உயிர் பிழைத்திருந்தனர்.*

*யாழ்ப்பாணத்தையும் கோட்டையையும் மீளக் கைப்பற்றுவதற்கான வியூகங்களை அமைக்கும் நடவடிக்கையில் அராலித்துறையில் ஈடுபட்டிருந்தபோதிலேயே இராணுவத்தில் 'ஹீரோ'க்களாக மதிக்கப்பட்ட லெப். ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ண ஆகியோர் தமிழீழ விடுதலைப் புலிகள் நிலத்தில் புதைத்திருந்த கண்ணி வெடியில் சிக்கி வேறு பலருடன் இறந்தனர்.*


*1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டை ஒருநீண்ட முற்றுகைக்குள்ளாகி யிருந்தது. 107 தினங்கள் இடம்பெற்ற இம்முற்றுகையை அடுத்து ஆயுதப்படையினர் கோட்டையை கைவிட்டு வெளியேறியிருந்தனர்.*

*இதன்பின்னர், யாழ்ப்பாணக் கோட்டையை கைப்பற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றி 1995ஆம் ஆண்டு வரை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர்.*

*இராணுவத்தினர் 1995ஆம் ஆண்டு மேற்கொண்ட சூரியக்கதிர் என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையையடுத்து யாழ்ப்பாணப் பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாணக் கோட்டை மீளவும் ஆயுதப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததோடு அங்கிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் புலிக்கொடி அகற்றப்பட்டு தேசியக் கொடியான சிங்கக்கொடியும் ஏற்றப்பட்டிருந்தது.*

*எனவே, அன்று ஒரு லெப். கேணல் தரத்திலிருந்த இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே அன்று கோட்டையை மீளவும் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையில் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளோடு ஈடுபட்டதோடு அதுபற்றி இந்திய வெளிவிவகார செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவிடம் எடுத்துக் கூறியிருந்தார்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஒக்ரோபர் - 08 வெள்ளிக்கிழமை**
பிலவ வருடம் - புரட்டாதி 22
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : திதித்துவயம்




**மேடம்**
தடுமாற்றங்கள் அகலும் நாள். சிறிய அளவில் தனவரவு உண்டு. முயற்சி ஒன்று கைகூடும். சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும். மேலதிகாரிக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**இடபம்**
சிறு பயணம் ஒன்று நல்ல பலனைத் தரும். மகிழ்வான நாள். காலை நேரத்தில் எதிலும் அதிக கவனம் தேவைப்படும் நாள். அருகில் இருப்பவர்களின் ஆதரவு அதிகரிக்கும்.

**மிதுனம்**
மதியத்திற்கு மேல் மனக்குழப்பம் தீர்ந்து நிம்மதி ஏற்படும். நேற்று முடிவடையாத நன்மை ஒன்று இன்று நடைபெறும். வியாபாரிகள் யோசித்துச் செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
உடல் ரீதியாக ஏற்பட்ட உபாதை தீர்ந்து நிம்மதி வரும். திடீர் சம்பவம் ஒன்று நிகழ்ந்து உற்சாகம் கூடுதலாகும். குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**சிம்மம்**
பணியிடத்தில் நிறைய மாறுதல் வரலாம். முயற்சியில் தாமதம் ஏற்படும். வியாபாரம் சூடு பிடிக்கும். நட்பு வட்டாரம் விரிவடையும். எதிரிகள் பின்வாங்குவர். மனதின் தடுமாற்றங்கள் அகலும்.

**கன்னி**
குடும்பத்தில் சந்தோஷ சம்பவம் ஏற்பட வாய்ப்புண்டு. சொத்து வாங்கும் முயற்சி கைகூடும். நம்பிக்கை துளிர்க்கும். தொழில் அமோகமாக நடைபெறும். அடகு வைத்த நகையை மீட்பீர்கள்.

**துலாம்**
வீண் விரயங்களில் இருந்து விடுபடுவீர்கள். நிம்மதி மீளும். சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெறும். மனதில் இருந்த பயம் நீங்கும். துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். இலாபம் வரும்.

**விருட்சிகம்**
பூமி விற்பனை, வாடகையில் இலாபம் வரும். மகிழ்ச்சி கூடும். சொத்து சேர்க்கை பற்றி இப்போதைக்கு பரபரப்பு வேண்டாம். சுபச்செலவுகள் செய்வீர்கள். அரசியல்வாதியால் அனுகூலம் உண்டு.

**தனுசு**
மாணவர்களுக்கு நன்மை ஏற்படும். பேச்சினால் லாபம் வரும். மனம் மகிழும். ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் சந்தோஷமான சம்பவங்கள் நடைபெறும்.

**மகரம்**
பொருளாதார நிலையில் எவ்வித தொய்வும் இருக்காது. குடும்பத்தினரிடையே அன்பு அதிகரிக்கும். சேமிப்பு கூடும். குழந்தைகள் நலன் கருதி தீட்டிய திட்டம் வெற்றி பெறும்.

**கும்பம்**
மனதில் நினைத்ததை இன்று செய்து முடிப்பீர்கள். நீண்ட நாளாக கிடைக்காத நன்மை ஒன்று இப்போது வரலாம். மனதில் தோன்றும் கருத்துகளை வெளிப்படையாக பேச வேண்டாம்.

**மீனம்**
அவசரப்போக்கால் சிலரின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். பணியாளர்கள் கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது. பணியில் சுறுசுறுப்பை கூட்ட வேண்டியிருக்கும். உற்சாகமான நாள்.

# தமிழகத்திலுள்ள கோவில்களை திறக்க அரசுக்கு 10 நாள் அவகாசம் தருகிறோம்

## போராட்டத்தை ஆரம்பித்துவைத்து அண்ணாமலை உரை

சென்னை, ஒக். 08

"தமிழ்நாடு அரசுக்கு 10 நாள்கள் அவகாசம் தருகிறோம். அதற்குள் தமிழகத்திலுள்ள கோயில்களை திறப்பது குறித்து நல்ல முடிவை அறிவிக்க வேண்டும்" என பா.ஜ.கவின் தமிழக மாநில தலைவர் அண்ணா மலை நேற்று அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் வாரத்தின் அனைத்து நாட்களிலும் கோயில்களை திறக்க வலியுறுத்தி பா.ஜ.க. சார்பில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. அதன்போதே அண்ணாமலை இந்த அறிவித்தலை விடுத்தார்.

தமிழ்நாட்டில் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக வெள்ளி,சனி,ஞாயிறு ஆகிய கிழமைகளில் கோயில், தேவாலயம், மசூதி போன்றவற்றில் மக்கள் வழிபாடு செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள், கல்லூரிகள், திரை யரங்குகள் என அனைத்திற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், வழிபாட்டு தலங்களை திறக்க மட்டும் ஏன் அனுமதி அளிக்கவில்லை என்றும், வாரத்தின் அனைத்து நாட்களும் கோயில்களை திறக்க வேண்டும் என்றும் பா.ஜ.க. தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தது.



இந்நிலையில், அனைத்து நாட்களிலும் கோயில்களை திறக்கக் கோரி நேற்று தமிழ்நாடு முழுவதும்12 திருக் கோயில்களின் முன்பாக பா.ஜ.கவினர் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

சென்னையில் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்த தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, "நல்ல விஷயங்களுக்கு பா.ஜ.க. எப்போதும் ஒத்துழைப்பு கொடுக்கும். அனைத்து நாட்களிலும் கோயில்களை திறக்கக் கோரி தமிழகத்தில் 12 இடங்களில் பா.ஜ.கவினர் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

இல்லாத கொரோனாவை காரணம் காட்டி தடை விதிக்கப்பட்டுள்ளதால் பாஜகவுக்கு வேறு வழியில்லாமல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. தமிழ்நாடு அரசுக்கு 10 நாட்கள் அவகாசம் தருகிறோம். அதற்குள் கோயில்களை திறப்பது குறித்து நல்ல முடிவை அறிவிக்க வேண்டும்" என்று கூறினார்.

# உள்ளாட்சி தேர்தலுக்கான 2ஆம் கட்ட பிரசாரம் நேற்று மாலையுடன் நிறைவு

## வாக்களிப்பு நாளை நடைபெறுகின்றது

சென்னை, ஒக். 08



தமிழகத்தில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப் பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இரண்டாம் கட்ட வாக்களிப்பு நாளை 9 ஆம் திகதி நடைபெறுகின்றது. இதற்கான பிரசாரங்கள் நேற்று மாலையுடன் முடிவடைந்தது.

முதற்கட்ட தேர்தல் நேற்று முன்தினம் முடிந்த நிலையில் 2 ஆம் கட்ட தேர்தல் நாளை நடைபெற உள்ளது. 2ஆம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் இடங்களில் நேற்று மாலை 5 மணியுடன் பிரசாரம் நிறைவு பெற்றது.

வெளியாட்கள் நேற்று மாலை 5.00 மணிக்குள்ளாக வெளியேறும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தார் கள். நேற்று மாலையுடன் தேர்தல் பிரசாரம் முடிவடைவதால், வேட்பாளர்கள் நேற்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாம் கட்ட வாக்கெளிப்பில் 74 சதவீதமானவர்கள் வாக்களித்ததாக அறிவிக்கப்படு கின்றது. இந்த உள்ளாட்சி தேர்தல் வாக்களிப்பு அமைதியாக நடைபெற்றது எனவும் 74.37 சதவீதம் வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

# அணு உலை கழிவுகளை கொட்டுவதற்கு தமிழகத்தைவிட வேறு இடம் இல்லையா?

## பிரதமரிடம் டி.ஆர்.பாலு கேள்வி



சென்னை, ஒக். 08

கூடங்குளம் அணு உலைக் கழிவு விவகாரத்தில் அணுக் கழிவுகளைக் கொட்ட தமிழ் நாட்டைத் தவிர வேறு இடம் இல்லையா என்றும், உச்ச நீதி மன்றத்தின் உத்தரவை மத்திய அரசு ஏற்காதா என்றும் பிரதமர் நரேந்திர மோடியிடம் டி.ஆர்.பாலு எம். பி.கேள்வி எழுப்பியுள்ளார்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் புதிதாக இரண்டாவது மற்றும் மூன்றாவது அணு உலைகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் இந்த அணுமின் நிலையத்தில் உற்பத்தி ஆகவுள்ள அணுக்கழிவுகளைச் சேகரித்து வைக்க அணுமின் நிலைய வளாகத்திலேயே, ஆனால் அணு உலைக்கு வெளியே, பயன்பாடு முடிந்த ஆனாலும் கதிரியக்கம் கொண்ட கழிவுகளின் இருப்பிடம் அமைக்க மத்திய அரசின் இந்திய அணுமின் கழகம் தீர்மானித்துள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலைய வளாகத்திலேயே இதற்கான சேகரிப்புக் கிடங்கு ஒன்றை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவுக்கு அப்பகுதி மக்களும் "பூவுலகின் நண்பர்கள்" அமைப்பும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் குறித்த முழு விவரங்களையும் கேட்டறிந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இதுபற்றி தி.மு.கவின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் திமுகவின் பொருளாளருமான டி.ஆர்.பாலுவுடன் ஆலோசனைகள் மேற்கொண்டார். அதன்பின் இந்தியப் பிரதமரும் அணுசக்தி அமைச்சருமான மோடியின் கவனத்திற்கு இந்த முக்கியப் பிரச்னையைக் கொண்டுசென்று அணுமின் நிலையக் கழிவுகள் இருப்பிடத்தைக் கூடங்குளம் வளாகத்தில் அமைப்பதைக் கைவிடவும் தமிழகத்துக்கு வெளியே தக்க இடத்தில் அமைத்திடவும் உரிய முயற்சிகளை முன்னெடுக்க அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து டி.ஆர்.பாலு எம்.பி. நேற்று பிரதமர் நரேந்திர மோடிக்கு விரிவான கடிதம் எழுதியுள்ளார். அதில் கூடங்குளம் அணு உலைக் கழிவு விவகாரத்தில் அணுக் கழிவுகளைக் கொட்ட தமிழ்நாட்டைத் தவிர வேறு இடம் இல்லையா? என அவர் கேள்வி எழும்பியுள்ளார்.



# இணுவிலில் திருட்டில் ஈடுபட்ட நபர் கைது!



யாழ்ப்பாணம், ஒக். 08

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இணுவில் பகுதியில் கோடரியைக் காட்டி மிரட்டி நகைத் திருட்டில் ஈடுபட்ட சந்தேகத்தில் தாவடியைச் சேர்ந்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்த 03ஆம் திகதி அதிகாலை 12.45 மணியளவில் குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இதன்போது 21 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டிருந்தன. சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான மாவட்ட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ-3)

# முஸ்லிம்கள் யாழில் வாக்காளர்களாக பதிவு செய்வதில் பெரும் சிக்கல்நிலை

## சபையில் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஒக். 08**

**விடுதலைப் புலிகளால் வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாமல் சிரமப்படுகிறார்கள். அவர்கள் தமது பிறந்த மண்ணில் வாக்களிக்க விரும்புகிறார்கள். எனினும், யாழ்ப்பாணத்தில் அவர்கள் வாக்காளர்களாக பதிவு செய்வதில் சிரமங்கள் உள்ளன. சட்டத் திருத்தம் மூலம், அவர்களின் வாக்களிக்கும் உரிமை உறுதி செய்யப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகளால் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு இலட்சம் மக்கள் வெளியிடங்களில் வசிக்கிறார்கள். யுத்தம் முடிந்த பின்னரும் அவர்களால் சொந்த இடங்களுக்கு திரும்ப முடியவில்லை. சொந்த இடங்களுக்கு திரும்புவதில் அவர்களுக்கு பல்வேறு நடைமுறை சிக்கலுள்ளது.

இப்படி இடம்பெயர்ந்தவர்களின் பிள்ளைகள், தாங்கள் பிறந்த மாவட்டங்களில் வாக்களிக்க விரும்புகிறார்கள். ஆனால், அவர்கள் சொந்த மாவட்டங்களில் வாக்களிப்பதில் சிக்கல்கள் உள்ளன. குறிப்பாக அவர்கள் தம்மை பதிவு செய்வதில், யாழ். மாவட்டத்தில் பல சிக்கல்கள் உள்ளன.

சொந்த இடத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்கள் தமது சொந்த மாவட்டத்தில் வாக்களிக்கும் உரிமை, அவர்களின் அடிப்படை உரிமை.

சொந்த இடத்தில் அவர்களுக்கு காணிகளும் உள்ளன. ஒரு விசேட திருத்தம் ஒன்றின் மூலம் அவர்களின் வாக்களிக்கும் உரிமை உறுதி செய்யப்பட வேண்டும் - என்றார்.

# பஸ் - ஓட்டோ விபத்து! 14 பேர் வரை காயம்

## மூவரின் நிலைமை கவலைக்கிடம்

கொழும்பு, ஒக். 08

இ.போ.ச. பஸ்ஸொன்றும், ஓட்டோவொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் 14 பேர் காயமடைந்துள்ளனர். இவர்கள் ஹல்துமுல்லை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஹல்துமுல்லைப் பகுதியில் கஸுபான என்ற இடத்தில் நேற்று, இவ் விபத்து இடம் பெற்றுள்ளது. (அ)

# 15ஆம் திகதி முதல் ரயில் சேவைகள்

கொழும்பு, ஒக். 08

ரயில் சேவைகளை மீள ஆரம்பிக்கத் தயாராக உள்ளதாக ரயில் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, சுகாதார வழிகாட்டல்கள் விரைவில் வெளியிடப்பட்டால், எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ரயில் சேவைகளை மீள ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொரோனா பரவல் காரணமாக ரயில் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# பூஸ்டர் டோஸ்க்கு முன்னுரிமை

கொழும்பு, ஒக். 08

60 வயதிற்கு மேற்பட்டவர்கள், முன்னணி சுகாதார சேவைப் பிரிவினர், மற்றும் பாதுகாப்புப் படையினருக்கும், கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ் அல்லது மூன்றாவது டோஸை வழங்குவதற்கு சுகாதார நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரனவினால் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (அ)

# கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீட்டு மதிலில் மோதி விபத்து!

வவுனியா, ஒக். 08

யாழ்ப்பாணம்-கண்டி பிரதான வீதியில் வவுனியா ஈரப் பெரியகுளம் பகுதியில் நேற்று முன் தினம் புதன்கிழமை பட்டா ரக வாகனம் வீட்டின் மதிலில் மோதியதில் ஒருவர் காயமடைந்தார் என ஈரப் பெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

அனுராதபுரத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த சிறிய பட்டா ரக வாகனம் வேகத்தை கட்டுப்படுத்த முடியாததால் விபத்து இடம் பெற்றதாக பொலிஸார் கூறினர்.

குறித்த விபத்தில் வாகனச் சாரதி காயமடைந்துள்ளதுடன், வாகனம் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# இலங்கையில் முதல் தடவையாக 3 பெண்கள் பிரதி பொலிஸ்மா அதிபர்களாக தரமுயர்வு!

கொழும்பு, ஒக். 08

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களாகக் கடமையாற்றி வரும் பெண் அதிகாரிகள் மூவர் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களாகக் கடமையாற்றிய ரேணுகா ஜயசுந்தர, நிஷாந்தி ஜயசுந்தர, பத்மினி வீரசூரிய ஆகியோர் பிரதி பொலிஸ்மா அதிபர்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



இலங்கையில், பெண் பொலிஸ் அதிகாரிகள் பிரதி பொலிஸ்மா அதிபர்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது இதுவே முதலாவது சந்தர்ப்பம் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொருட்களின் விலை சடுதியாக அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 08

பல்வேறு வகைப்பட்ட பொருள்களின் விலைகள் அதிகளவில் அதிகரித்துள்ளதாக கொழும்பு வியாபாரிகள் சங்கத்தின் பிரதான செயலாளர் சமிந்த விதானகே தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் விலை சாதாரணமயமாக்கல் திட்டம் ஒன்றை செயல்படுத்தப்படாவிட்டால் நெருக்கடியான நிலை ஏற்படும் என அவர் கூறினார்.

கட்டுமானப் பொருள்களின் விலை தொடர்பில் வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக கவனம் செலுத்துமாறு அவர் தெரிவித்தார். (அ)

# கப்ரால் பதவி வகித்த இராஜாங்க அமைச்சின் பொறுப்புகள் அனைத்தும் நிதியமைச்சின் கீழ்

கொழும்பு, ஒக். 08

தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பதவிவகித்த நிதி, மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் பணிகள் மற்றும் பொறுப்புக்களை நிதியமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அஜித் நிவாட் கப்ரால் அண்மையில் பதவி விலகிப் பின்னர் மத்திய வங்கியின் ஆளுநராக நியமனம் பெற்றார்.

இதனையடுத்து அந்த அமைச்சின் செயல்பாடுகள், பொறுப்புக்கள், முன்னுரிமை, குறித்த நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்பு ஆகியவற்றை நிதியமைச்சின் கீழ் கொண்டு வரும் வகையில் இந்த அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

# 20 ஆயிரம் இடங்களில் மண்சரிவு அபாயநிலை

கொழும்பு, ஒக். 08

நாடளாவிய ரீதியில் மண்சரிவு அபாயம் மிக்க சுமார் 20 ஆயிரம் இடங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதிகளிலுள்ள சுமார் 15,000 குடும்பங்களை அங்கிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் மண்சரிவு ஆய்வுப்பிரிவின் பணிப்பாளர் கலாநிதி காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.



## சந்நிதியான் ஆச்சிரமத்தினால் நிவாரணப்பொருள் விநியோகம்

வடமராட்சி, ஒக். 08
தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் (764) தனியார் பஸ் சேவைச் சங்கம் சார்ந்த - சாரதி, நடத்துநர்கள், நேரக்காப்பாளர்களின் குடும்பங்களுக்கு அத்தியவசியமான உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

கோவிட்-19 இடர் கால நிவாரண உதவித் திட்டத்துக்கு அமைவாக யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் தனியார் பஸ் சேவைச் சங்கம் சார்ந்த 764 பாதை இலக்க சாரதிகள், நடத்துநர்கள், நேரக்காப்பாளர்கள் உள்ளடங்கிய 75 குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 140,000 ரூபாய் பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருள்களான அரிசி,மா, சீனி, பருப்பு உள்ளடங்கலான பொருள்கள் வழங்கப்பட்டன.

சைவத்திரு மோகனதாஸ் சுவாமிகளால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைத்து யாழ்ப்பாணம்-புன்னாலைக்கட்டுவன் தனியார் பஸ் சேவைச்சங்க நிர்வாகிகளிடம் இந்த பொருள்கள் கையளிக்கப்பட்டன. (அ-2)

# போக்குவரத்துத்துறையை ஊக்குவிக்க அமெ. உதவி

### அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் தூதரக தலைமை அதிகாரி தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.08**
**இலங்கையில் போக்குவரத்துத் துறையை ஊக்குவிக்க அமெரிக்க அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல், பொருளாதார தலைமை அதிகாரி திருமதி. சூசன் வால்கே தெரிவித்தார்.**



போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியுடன் நேற்று வியாழக்கிழமை போக்குவரத்து அமைச்சில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின் போது, அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, நாட்டின் போக்குவரத்துத் துறையின் தரத்தை மேம்படுத்தவும், இதற்காக புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும் அமைச்சு ஒரு நிலைப்பாட்டில் உள்ளது என தெரிவித்தார்.



## நாமலுக்கு புதிய பதவி!

கொழும்பு, ஒக். 08
இலங்கை-பிரான்ஸ் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் புதிய தலைவராக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த நியமனம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் இலங்கைக் கான பிரான்ஸ் தூதுவர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# 81 சீனி கொள்கலன்களை விடுவிக்க கட்டண குறைப்பு

கொழும்பு, ஒக். 08
துறைமுக அதிகாரசபையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 81 சீனி கொள்கலன்களை விடுவிப்பதற்காக பெருந்தொகை கட்டணத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாய் நிதி இவ்வாறு கட்டணக்குறைப்பு செய்யப்பட்டுள்ளதாக துறைமுக அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

சதொச நிறுவனத்தின் கோரிக்கைக்கு அமைவாக அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தனவின் ஆலோசனைக்கு அமைவாக இந்த கட்டணக் குறைப்பு வழங் கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த சீனிக் கொள்கலன்கள் கடந்த மூன்று மாதங்களாக துறைமுக அதிகாரசபையின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனி இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ள மையால் கிட்டத்தட்ட 500 கொள்கலன்கள் துறைமுகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த அதிகாரி குறிப்பிட்டார்.

மேலும், சதொச நிறுவனத்துக்காக விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில் 2 ஆயிரம் மெற்றிக்தொன் சீனி காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## காருடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து

வவுனியா, ஒக். 08
வவுனியா குருமன்காடு சந்திக்கு அருகாமையில் காருடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் இளைஞன் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்றுக் காலை 9 மணியள வில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

மன்னார் வீதியூடாக வவுனியா நகர் நோக்கி சென்று கொண்டிருந்த கார் திடீரென எதிர்ப்பக்கம் திரும்ப முற்பட்ட போது அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் காருடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

அத்துடன் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இன்னுமோர் காருடன் மோதியதில் காரின் முன்பகுதி சேதமடைந்துள்ளது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பாவற்குளத்தை சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேல திக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நவம்பர் 12 ஆம் திகதி பட்ஜெட் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக். 08
2022ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் 12ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் குறித்து தீர்மானிக்கப்பட்டதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்துடன் வரவு-செலவுத் திட்டம் மீதான மூன்றாம் வாசிப்பையும் வாக்கெடுப்பையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பைசர் தடுப்பூசியை செலுத்தியுள்ள இலங்கை பணியாளருக்கே அனுமதி

### கட்டார்,சவூதி நாடுகள் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 08
பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியை பெற்று தமது நாடுகளுக்கு வருமாறு இலங்கை பணியாளர்களுக்கு கட்டார் மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.

சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் (Dose) செலுத்திக்கொண்ட இலங்கைப் பணியாளர்கள் பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியை பெற்று தமது நாடுகளுக்கு வருமாறு அவை அறிவித்துள்ளன.

மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்வதற்கு பைசர் தடுப்பூசி பெற்றுக் கொள்வது அத்தியாவசியம் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக வேலைவாய்ப்புப் பணியகத்தில் சுமார் 20,000 பேர் பதிவு செய்துள்ளனர்.முதல் கட்டமாக 8,000 பேருக்கே பைசர் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

ஏனையோருக்கும் வழங்குவதற்காக பைசர் தடுப்பூசியை பெற்றுத்தருமாறு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சமையல் எரிவாயு விலை நிச்சயம் அதிகரிக்கப்படும்

### அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 08
சமையல் எரிவாயுவின் விலை நிச்சயம் அதிகரிக்கப்படும் என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவிக்கின்றார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரை நிகழ்த்திய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையினால், சமை யல் எரிவாயுவின் விலையை கட்டாயம் அதிகரிக்க வேண் டிய நிலைமை ஏற்பட்டுள்ள தாக அவர் கூறினார்.

# ஆசிரியர்களின் சம்பள பிரச்னைக்கு கட்டம் கட்டமாக தீர்வு காணப்படும்

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறுகிறார்



கொழும்பு, ஒக். 08

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்குக் கட்டம் கட்டமாகத் தீர்வு காணப்படும் என்று கல் விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பது வெறுமனே நிதிப் பிரச்னை மாத்திரமல்ல. 1994ஆம் ஆண்டு ஆசிரியர் சேவை அரசமைப்பை அறிமுகப்படுத்தி சம்பளத்தை அதிகரித்தமையால் ஏற்பட்ட அரச சேவை முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வி.சி பெரேரா ஆணைக்குழுவை நியமித்த பின்னர் அதிபர், ஆசிரியர்களின் சம்பளத்தைப் பின்தள்ளி ஏனைய அரச சேவைகளின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க முற்பட்டமையால் ஏற்பட்ட பிரச்னையாகும். ஆசிரியர் மற்றும் ஏனைய அரச சேவைகளுக்கு இடையிலான சம்பள முரண்பாடுதான் கடந்த 26 வருடங்களாக நிலவுகின்றது.

2018ஆம் ஆண்டு அமைச்சரவை உப குழுவின் சம்பள முறை தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கை மற்றும் சுபோதினி குழுவின் சிபாரிசுகள் தொடர்பில் சம்பளம் மற்றும் சேவையாளர்கள் குழு தமது சிபாரிசுகளை இன்னமும் வழங்கவில்லை.

கொரோனா நெருக்கடியால் நிதி தொடர்பான பிரச்னைகள் உள்ள அதேவேளை, ஏனைய அரச சேவைகளுக்குப் பாதிப்பில்லாது இந்த விவகாரத்துக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற தேவை அனைத்து அரசுகளுக்கும் இருந்தமையால்தான் கடந்த 26 வருடங்களாக இந்தப் பிரச்னை தொடர்கின்றது.

அமைச்சரவை உப குழுவின் சாதகமான சிபாரிசுகளின் பிரகாரம் இந்தப் பிரச்னைக்குத் தீர்வைப் பெற்றுகொடுப்பது குறித்து அரசு அவதானம் செலுத்தியுள்ளது.

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக கட்டம் கட்டமாக இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முடிவெடுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)



# குருநகர் மீனவர்கள் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 08

கற்கடதீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இந்திய ட்ரோலர் படகு மோதி சேதப்படுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாழ்ப்பாணம் - குருநகர் பகுதி மீனவர்கள் நேற்று கடற்றொழில் நடவடிக்கையை புறக்கணித்தனர்.

இதனால், மீன்பிடிப் படகுகள் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டதுடன், மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் இருந்து விலகியுள்ளனர்.

கடற்படையினர் தங்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் என்றும் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய ட்ரோலர் படகுகளைத் தடுத்து நிறுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும், அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (அ)

# மேலும் 435 பேர் பூரண குணம்!

கொழும்பு, ஒக். 08

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 435 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று வியாழக்கிழமை வீடுகளுக்கு திரும்பினரென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 78 ஆயிரத்து 761 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண் ணிக்கை 5 இலட்சத்து 22 ஆயிரத்து 778 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 185 ஆக பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மாகாண தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துகின்றார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு, ஒக். 08

காலம் கடந்துள்ள மாகாண சபைகளுக்கான தேர்தல்களை விரைவில் நடத்தி ஆளுநரகளின் அதிகாரத்தில் உள்ள மாகாணங்களுக்கு மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்க அரசு துரித கவனம் செலுத்தவேண்டும். மாகாணசபை தேர்தலை நடத்தி 13ஆம் திருத்த சட்டத்தை முழுமையாக அமுல் படுத்தும் செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை, தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு), ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) மற்றும் ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், மாகாணசபைகள் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவதற்கு முன்னைய, நாம் அங்கம் வகித்த அரசாங்கமும் பொறுப்பு கூறியாகவேண்டும். அப்போது எல்லை நிர்ணயங்கள் என்ற காரணிகளை கையில் எடுத்துக்கொண்டு காலத்தை கடத்தியது மட்டுமல்லாது இறுதியாக இவற்றை கையாண்ட அமைச்சரே எல்லை நிர்ணய அறிக்கைக்கு எதிராக வாக்களித்த மிகப்பெரிய நகைச்சுவையும் அப்போது இடம்பெற்றது.

ஆகவே இந்த அரசாங்கம் மாகாணசபைகள் தேர்தலை நடத்துவதற்கு கூடிய கவனம் செலுத்தவேண்டும்-என்றார். (அ)

# 3 ஊடக நிறுவனங்களுக்கு எதிரான ரிஷாத்தின் விண்ணப்பம் நிராகரிப்பு

கொழும்பு, ஒக். 08

கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தாக்கல் செய்த விண்ணப்பத்தை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

விமல் வீரவன்ஸ மற்றும் மூன்று ஊடக நிறுவனங்களுக்கு எதிராக இடைக்காலத்தடை கோரி பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தாக்கல் செய்த விண்ணப்பத்தை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிராகரித்துள்ளது. (அ)

# மாலை ஐந்து மணிக்கு பின்னர் போத்தலில் சிறுநீர் கழிக்கும் எம்.பி.

## ஐக்கிய மக்கள் சக்தியினர் முறைப்பாடு

கொழும்பு, ஒக். 08

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியூதீன், மாலை 5 மணிக்குப் பின்னர், போத்தலில் சிறுநீர் கழிக்கவேண்டியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியினர் பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் ரிஷாத் பதியூதீன் எம்.பி, மாலை 5 மணிக்குப் பின்னர் மலசலகூடத்துக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அதனால், அவர் போத்தலிலே சிறுநீர் கழிக்கின்றார். ஆகையால், பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை பாதுகாப்பதற்கான வழிவகைகளைச் செய்யுமாறு சபா



நாயகரிடம் லக்ஷ்மன் கிரியெல்ல கோரினர்.

இதனிடையே குறுக்கிட்ட அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கடந்த காலங்களில் நாங்களும் சிறையில் அடைக்கப்பட்டோம். அப்போதும் மாலை 5 மணிக்குப் பின்னர், போத்தல்களிலே சிறுநீர் கழித்தோம்-என்றார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ரிஷாத் பதியூதீன் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சபையிலும் சிறப்புரிமை இல்லையா?

## கஜேந்திரன் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஒக். 08

பாராளுமன்றத்திலும் தமிழ் உறுப்பினர்களுக்குச் சிறப்புரிமை இல்லையா என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் கேள்வியெழுப்பினார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவது தமிழர்களின் மரபாக மாறியுள்ளது. 15ஆம் திகதி முதல், கொரேனா காரணமாக நான் தனிநபராக அந்த அஞ்சலியை செய்தேன். இறந்தவர்களை நினைவுகூர அனைவருக்கும் அனுமதிக்கப்படும் என உலக நாடுகளுக்கு இந்த அரசு சொல்கிறது. அவர்கள் விடுதலைப் புலிகள் என்றாலும், விடுதலைப் புலிகளின் அடையாளங்கள் இல்லாமல் நினைவு கூரலாம் என்கிறார்கள்.

நான் நினைவேந்தல் நடத்தியபோது, யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் வந்து என்னைத் தடுத்தனர். நீதிமன்ற உத்தரவைக் கேட்டேன். அவர்களிடம் இல்லை. உத்தரவுக்காக அரை மணித்தியாலம் காத்திருந்தேன். நான் சட்டத்தின்படி, அஞ்சலி செலுத்த முற்பட்டபோது, பொலிஸார் அநாகரிகமாக நடந்து, தீபத்தை காலால் மிதித்தனர். என்னை கட்டாயமாக இழுத்துச் சென்றனர்.

நினைவேந்தல் நடத்தியதற்காகத்தான் என்னை கைது செய்தனர். ஒரு மணித்தியாலத்தின் பின்னர் என்னிடம் வாக்குமூலம் பெற ஆரம்பித்தபோது, தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறியதாக என் மீது சோடிக்கப்பட்ட வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த கைது எனது சிறப்புரிமையை மீறும் செயல் எனச் சிறப்புரிமை பிரேரணை ஒன்றை பாராளுமன்ற செயலாளர் ஊடாக சமர்ப்பித்திருந்தேன். எனினும், அது மறுக்கப்பட்டது. இந்த நாட்டில் தமிழ் மக்களும், பாராளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்களும் புறக்கணிக்கப்படுகிறார்களா? தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்றால் அவர்களுக்கு சிறப்புரிமையும் இல்லையா?

கடந்த ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கான நிதி விடுவிக்கப்படாமல் உள்ளது. ஆனால் வவுனியாவின் சில சிங்கள பகுதிகளில் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இது இனவாத செயல் - என்றார். (அ)

ஈழநாடு






# புதியதோர் அரசியல் சூழ்நிலையை ஷ்ரிங்லா வருகை ஏற்படுத்தியுள்ளதா?

**அகிலன்**

> **சீனா சார்பான இலங்கையின் போக்கில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி - இந்திய சார்பு நிலைக்கு அல்லாவிட்டாலும் ஓரளவு நடுநிலைக்கு இலங்கையைக் கொண்டுவருவதற்கான ஒரு நகர்வாகத்தான் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவின் இலங்கை விஜயம் அமைந்திருந்தது. இலங்கையில், அவர் நடத்திய பேச்சுகள் அனைத்திலும் இதனை உணர முடிந்தது**

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவின் இலங்கைக்கான நான்கு நாள் அதிரடி விஜயம்தான் இலங்கை அரசியலில் இந்த வாரம் சூடான விவகாரமாக இருந்தது. அவரின் விஜயத்தின் அனைத்து நகர்வுகளையும் இராஜதந்திர வட்டாரங்கள் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருந்தன. இலங்கை - இந்திய உறவுகளைப் பொறுத்தவரையில் மட்டுமன்றி, இலங்கையின் சர்வதேச உறவுகளைப் பொறுத்தவரையிலும், ஷ்ரிங்லாவின் விஜயம் அடிப்படையில் மாற்றங்கள் சிலவற்றை ஏற்படுத்தியிருப்பதாகவே அரசியல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

இந்த நான்கு நாள் விஜயத்தின் போது வடக்கு, கிழக்குக்கு விஜயம் செய்த அவர், யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நடத்திய பேச்சுகள் முக்கியமானவை. அனைத்துத் தரப்பினரையும் அவர் சந்தித்திருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது. திருமலையில் சீனன்குடா எண்ணெய்த் தாங்கிகள் அமைந்துள்ள பகுதிக்கும் அவர் விஜயம் செய்திருந்தார். குறிப்பிட்ட எண்ணெய்த் தாங்கிகள் இந்தியாவின் கட்டுப்பாட்டில் தான் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்து வதற்கு இந்த விஜயம் அவருக்குப் பயன்பட்டிருக்கலாம். அதற்கு முன்பாக நின்று அவர் எடுத்திருந்த படம் பல செய்திகளைச் சொல்கின்றது.

சீனாவுக்கு சார்பான ஒரு போக்கில்தால் இலங்கை சென்று கொண்டிருக்கின்றது என்பது இரகசியமானதல்ல. இந்தப் போக்கிலிருந்து மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான அழுத்தங்களை ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையின் மூலமாகவும், ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையை ரத்துச் செய்தல் போன்றவற்றின் மூலமாகவும் மேற்கு நாடுகள் மேற்கொண்டுவருகின்றன. இந்தியாவின் மறைமுகமான ஆதரவுடன்தான் இந்த நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இந்த நகர்வுகளின் மூலம் இலங்கை கடுமையான ஒரு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள பின்னணியில்தான் இந்திய வெளிவிவகாரச் செயலாளரின் இலங்கைக்கான விஜயம் இடம்பெற்றது.

### அணுகுமுறை மாற்றம்?

அதாவது, சீனா சார்பான இலங்கையின் போக்கில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி - இந்திய சார்பு நிலைக்கு அல்லாவிட்டாலும் ஓரளவு நடுநிலைக்கு இலங்கையைக் கொண்டுவருவதற்கான ஒரு நகர்வாகத்தான் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவின் இலங்கை விஜயம் அமைந்திருந்தது. இலங்கையில், அவர் நடத்திய பேச்சுகள் அனைத்திலும் இதனை உணர முடிந்தது. ஷ்ரிங்லாவின் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த காலப்பகுதியில் இடம்பெற்ற மூன்று சம்பவங்கள் இதில் கவனிக்கத்தக்கது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் இந்தியா தோல்வியடைந்திருந்தாலும், மேற்கு முனையத்தை இந்தியாவுக்குக் கொடுக்கும் உடன்படிக்கை ஷ்ரிங்லாவின் இலங்கை விஜயம் ஆரம்பமாகவுள்ள நிலையில் கைச்சாத்திடப்பட்டது. கிழக்கைக் கொடுக்காமல் விட்டதால் சீற்றமடைந்திருந்த இந்தியாவை சமாதானப்படுத்துவதற்காகத்தான் மேற்கு முனையத்தை இந்தியாவுக்குக் கொடுக்க இலங்கை முன்வந்திருந்தது. இதனை பெறுவதில் தயக்கம்காட்டிய இந்தியா கடந்த வாரம் அதனைப் பெற்றுக்கொள்வதற்கான உடன்படிக்கையில் கையொப்பமிட்டது.

இதனைவிட, கிழக்கு மாகாணத்தில் இந்தியப் படைகளும் இலங்கைப் படைகளும் பங்குகொள்ளும் பாரிய இராணுவ பயிற்சி - ஒத்திகை ஒன்று இதே காலப்பகு தியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இரு நாடுகளும் பங்குகொள்ளும் இராணுவ ஒத்திகை நீண்ட காலத்தில் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

மூன்றாவதாக, ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா திருமலை எண்ணெய்க் குதங்களை பார்வையிட்ட நிலையில், அது குறித்த சர்ச்சை பாராளுமன்றத்தில் இரு தினங்களுக்கு முன்னர் கிளப்பப்பட்டது. இவை 1987 இலங்கை இந்திய உடன்படிக்கை மூலமாக நிரந்தரமாகவே இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில் இதன்போது பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். ஆக, இந்தியாவுடன் இணைந்து செயல்படும் தமது விருப்பதை இந்த வகையில் இலங்கை வெளிப்படுத்தியிருக்கின்றது.

இவை அனைத்தையும் பார்க்கும் போது சீனாவின் பிடியிலிருந்து இலங்கையை வெளியே கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கு நாடுகளின் ஆதரவுடன் இந்தியா முன்னெடுத்திருப்பதாகவே தெரிகின்றது. அதன் முக்கியமான ஒரு கட்டமாகத்தான் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவின் விஜயம் இடம்பெற்றிருக்கின்றது. அதற்கான இராஜதந்திர காய்நகர்த்தல்கள் பல்வேறு மட்டங்களில் முன்னெடுக்கப்பட் டுள்ளது.

### மாகாண சபை தேர்தல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களின் போது, இரண்டு விடயங்களை ஷ்ரிங்லா முக்கியமாகக் குறிப்பிட்டிருந்தார். ஒன்று - 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துமாறும், மாகாண சபைகளுக்கான தேர்தல்கள விரைவில் நடத்துமாறும் தமிழ்த் தரப்புக்கள் அரசாங்கத்தை ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும் என்பதை ஒரு கோரிக்கையாக அவர் முன்வைத்தார். அதேவேளையில், இதற்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்கு இந்தியாவும் கொடுக்கும் எனவும் அவர் அதன்போது உறுதியளித்திருந்தார்.

அதன்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான பேச்சின் போதும் இதனை ஷ்ரிங்லா வலியுறுத்தினார். அதாவது, மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் விரைவாக நடத்தப்பட வேண்டும். 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அவர் ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டார். இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, அந்தக் கோரிக்கையை நிராகரிக்கவில்லை. பதிலாக 13 இல் இருக்கக்கூடிய பலங்கள், பலவீனங்களை முதலில் ஆராய வேண்டும் என ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் அவர் 13ஆவது திருத்தத்தையோ மாகாண சபைகளையோ ஏற்றுக் கொண்ட ஒருவரல்ல. இவை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதுதான் அவரது நிலைப்பாடு. இந்தியாவுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகராக புதுடில்லிக்கு அனுப்பப்பட்டுள்ள மிலிந்த மொறகொடவும் இதே நிலைப்பாட்டைக்கொண்ட ஒருவர்தான். இந்த நிலையில் ஷ்ரிங்லாவுக்கு ஜனாதிபதி சொன்ன பதில் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் அவருக்குள்ள தயக்கத்தைக் காட்டுகின்றது.

### மாகாண அதிகாரங்கள்

இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கையில் செல்வாக்குச் செலுத்துவதற்கு இருக்கக்கூடிய பிரதான கருவியாக 13 ஆவது திருத்தம் மட்டும்தான் உள்ளது. அதனை கடந்த காலங்களிலும் இந்தியா பயன்படுத்தியது, இப்போதும் அதனைப் பயன்படுத்துகின்றது. எதிர்காலத்திலும் அதனைப் பயன்படுத்தும் என்பதைத்தான் ஷ்ரிங்லாவின் விஜயத்தின் போது அவர் தெரிவித்த தகவல்கள் உணர்த்துகின்றது. உண்மையில், சட்டபூர்வமான முறையில் இலங்கையை வழிக்குக் கொண்டுவருவதற்கு இந்தியாவிடம் இருக்கக்கூடிய ஓர் ஆயுதம் அதுதான்.

மனித உரிமைகள் விவகாரம், பொருளாதாரம் போன்வற்றைப் பயன்படுத்தி இலங்கை மீது அழுத்தம் கொடுக்கும் அதேவேளையில், 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோருவதன் மூலம், இலங்கையில் தன்னுடைய பிடியை வைத்திருப்பதுதான் இந்தியாவின் உபாயம். ஷ்ரிங்லாவின் விஜயமும் அதனைத்தான் உணர்த்தியிருக்கின்றது. இலங்கை அரசும் கடுமையான அழுத்தங்களையும், நெருக்கடிகளையும் எதிர்கொள்வதால் ஓரளவுக்காவது இவ்விடயத்தில் இறங்கிச் செல்லவேண்டிய நிர்ப் பந்தத்தில் இருப்பதாகவே தெரிகின்றது.

மாகாண சபைகள் செயல்படாதிருக்கும் நிலையில் அதற்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் பறிபோகக்கூடிய நிலைமையும் காணப்படுகின்றது. மாகாண சபைகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த காணி, பொலிஸ் அதிகாரங்கள் ஏற்கனவே இல்லாதொழிக்கப்பட்டுவிட்டன. தற்போது மாகாண சபைகளுக்கு இருக்கக்கூடிய கல்வி, சுகாதாரத் துறைக்கான அதிகாரங்களும் காவு கொள்ளப்படும் நிலை காணப்படுகின்றது. மாகாண சபைகள் செயற்படாத நிலையில் அதனைச் செய்வதற்கு மத்திய அரசு முற்படுவதைக் காணமுடிகின்றது. தொடர்ந்தும் மாகாண சபைகள் செயற்படாவிட்டால், ஏனைய அதிகாரங்களும் காணாமல் போய்விடும் அபாயம் உள்ளது.

இந்தப் பின்னணியில்தான் மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைந்தது நடத்த வேண்டும் என இந்தியா அழுத்தம் கொடுக்கின்றது. அதேவேளையில், இவ்விடயத்தில் தமிழ்த் தரப்புக்கள் உறுதியாகவும், பலமாகவும் குரல் கொடுக்கவில்லை எனவும் இந்தியா கருதுவதாகத் தெரிகின்றது. கூட்டமைப்பினருடனான சந்திப்பின் போது இந்திய வெளிவிவகாரச் செயலாளர் இதனையும் கூறியிருக்கின்றார். இது போன்ற விடயங்களிலாவது தமிழ்த் தரப்பினர் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் முன்னரைப்போல சீனாவின் பக்கத்துக்கு ஒரேயடியாகச் சாய்ந்துவிட முடியாது என்பதை இந்தியா உணர்த்தியிருக்கின்றது. இந்தியா நேரடியாகக் கொடுத்திருக்கும் அழுத்தங்களை தவிர்த்துச் செல்வதும் இலங்கைக்கு சாத்தியமில்லை. இந்த நிலையில், கூட்டமைப்புடன் பேச்சுகளுக்கு அரசு செல்கின்றதோ இல்லையோ மாகாண சபைத் தேர்தலை நோக்கிச் செல்ல வேண்டிய அவசியம் இருப்பதாகவே தெரிகின்றது. ■

# நவராத்திரி விரதம் ஏன் முக்கியமானது?

இந்து சமய மக்களால் வெகு விமர்சையாக அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் ஒன்றாக நவராத்திரி காணப்படுகிறது. நவராத்திரி என்பது "நவ + இராத்திரி" என்பன சேர்ந்தே உருவானது.

ஒன்பது இரவுகள் என பொருள் கொள்ளப்படுகிறது. சக்திக்காக அனுஸ்டிக்கப்படும் ஒன்பது இரவுகள் என்பது இதன் பொருளாகும்.

உலகமெங்கும் இந்துக்கள் இதனை பண்டிகையினை போல மகிழ்ச்சியாக கொண்டாடுவார்கள். இக்கட்டுரையில் இதன் வரலாறு அதன் அர்த்தங்கள் சிறப்புகள் போன்றவற்றை நோக்கலாம்.

**நவராத்திரி உருவான கதை**

மகிஷாசுரன் எனும் அரக்கன் பிரம்ம தேவரிடம் கடும் தவம் புரிந்து தனக்கு யாராலும் அழிவில்லை ஒரு கன்னி பெண்ணால் தான் அழிவு உண்டாகும் எனும் வரம் பெற்றான். இதனால் அவன் தேவர்களை துன்புறுத்த துவங்கினான்.

இதனால் பாதிக்கப்பட்ட இந்த உலகத்தையும் தேவர்களையும் காக்க 'சக்தி' பெண் உருவம் கொண்டு பூமியில் பிறந்தார்.

மகிஷாசுரனை வதம் செய்வதற்காக போர் புரிந்த ஒன்பது நாட்களும் நவராத்திரி என்று கொண்டாடப்படுகின்றது என புராணங்களில் கூறப்படுகிறது. பத்தாவது நாள் விஜயதசமி எனவும் அனுஸ்டிக்கப்படுகிறது.

**சக்திகளின் வழிபாடு**

இந்துக்களின் மும்மூர்த்திகள் என அழைக்கப்படும் பிரம்மா, விஸ்னு, சிவன் எனப்படும் தெய்வங்களினுடைய சக்திகளான சரஸ்வதி, மஹாலக்ஷ்மி, துர்க்கை எனப்படும் சக்திகளுக்காக இந்த விரதம் நோற்கப்படுகிறது.

முதல் மூன்று தினங்களும் வீரத்தை வேண்டி துர்க்கையினையும் அடுத்த மூன்று தினங்களும் செல்வத்தை வேண்டி மஹாலக்ஷ்மியினையும் இறுதி மூன்று தினங்களும் கல்வியை வேண்டி சரஸ்வதியும் வழிபடுவார்கள்.

இவ்வாறு விரதம் அனுஷ்டித்து மூன்று சக்திகளையும் வழிபடுவதனால் வீரம், கல்வி,



செல்வம் என்பன வாழ்வில் கிடைக்கும் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.

**தத்துவம்**

இந்துக்களின் இந்த நவராத்திரி காலம் சக்தி வழிபாட்டின் தத்துவங்களை உணர்த்துகிறது. தீமைகளை இந்த உலகில் அழித்து தர்மத்தை நிலை நாட்டுகின்ற சக்தியை வழிபடுகின்ற காலப்பகுதியாக இதை கருதுகின்றனர்.

அறியாமை மற்றும் துன்பங்கள் நீங்கி வாழ்வில் ஒளி பிறக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த நவராத்திரி விழா அனுஷ்டிக்கப்படுகிறது.

அனைத்து இடங்களிலும் சக்தி நிறைந்திருக்கிறாள் என்பதை வெளிக்காட்டும் வகையில் கொலு வைக்கும் நிகழ்வும் இடம்பெறுவதனை காணலாம்.

**தீமையை அழிக்கும் பண்டிகை**

மகிஷாசுரன் என்ற அரக்கனை அழித்து இந்த உலகத்துக்கு நன்மையை அருளிய சக்தி இந்த உலகத்தில் தமது வாழ்வில் உள்ள கஷ்ரங்கள், துன்பங்கள், நோய்கள் அனைத்தையும் இல்லாது ஒழிப்பார் என்ற நம்பிக்கையில் வழிபாடு இடம் பெறுகிறது.

அலங்கார விளக்குகள், ஆடல்பாடல் கலைகள் என தீயவைகள் நீங்கி மகிழ்ச்சியாக மக்கள் இந்த காலப்பகுதியை கொண்டாடுவார்கள் வட இந்தியாவிலும், இலங்கையிலும் இந்த நவராத்திரி அதிகம் பிரபல்யமாக கொண்டாடப்படுகிறது.

**விழுமியங்கள்**

வாழ்க்கைக்கு தேவையான மூன்று

> **மகிஷாசூரன் என்ற அரக்கனை அழித்து இந்த உலகத்துக்கு நன்மையை அருளிய சக்தி இந்த உலகத்தில் தமது வாழ்வில் உள்ள கஷ்ரங்கள், துன்பங்கள், நோய்கள் அனைத்தையும் இல்லாது ஒழிப்பார் என்ற நம்பிக்கையில் வழிபாடு இடம் பெறுகிறது.**

முக்கியமான கல்வி, வீரம், செல்வம் என்பனவற்றை பெற் றுக்கொள்ள வேண்டும் அப்போது வாழ்வில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற விடயத்தை கற்று தருவதாக உள்ளது.

விரதகாலங்களில் உணவை விடுத்து விரதம் காப்பார்கள் இது பசி என்ற உணர்வின் முக்கியத்துவத்தை மனிதர்களுக்கு உணர்த்துகிறது.

மற்றும் இந்த விரத காலங்களில் வீடுகளை துப்பரவாகவும் கோலங்கள் போட்டு அழகாகவும் வைத்திருப்பர் இது மக்களிடையே ஒரு அழகான வாழ்வியலை உருவாக்குகிறது.

இந்த நவராத்திரி விரதமானது மக்கள் மனதில் மகிழ்ச்சியினையும் பக்தி உணர்வினையும் விதைப்பதாக இருக்கிறது.

வீடுகளிலும் ஆலயங்களிலும் மக்கள் ஒன்றாக கூடி பக்தி பாடல்களை இசைத்து சக்தியின் மகிமைகளை பேசி மகிழ்ச்சியாக இந்த விரதத்தை அனுஸ்டிப்பார்கள் விதம் விதமாக உணவு பண்டங்களை தயாரித்து ஒற்றுமையாக உண்பார்கள்.

உலகமெங்கும் இந்துக்களை பொறுத்த வரையில் இது ஒரு பண்டிகையாக அனுஷ்டிக்கப்படுவது சிறப்பான விடயமாகும்.



# சீன – தாய்வான் உறவில் உருவான சிக்கலின் பின்னணிதான் என்ன?

சீனா மற்றும் தாய்வான் இடையே 40 வருடங்களில் இல்லாத அளவு பதற்றம் நிலவுவதாக தாய்வானின் பாதுகாப்புத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் இருநாடுகளுக்கும் இடையே "தற்செயலமான தாக்குதல்" நடைபெறும் ஆபத்து இருப்பதாகவும் அவர் எச்சரித்துள்ளார். நான்கு நாட்களாக தைவானின் வான் பாதுகாப்பு மண்டலத்தில் சீனா தொடர்ந்து இராணுவ ஜெட்களை ஏவி வருவதை அடுத்து தைவான் அமைச்சரின் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

தாய்வான் தன்னை ஓர் இறையாண்மை சுயாட்சை நாடாகதான் கருதுகிறது. ஆனால் சீனா தைவானை தனது நாட்டிற்கு உட்பட்ட ஒரு பகுதியாகவே பார்க்கிறது.

வலுக்கட்டாயமாக தாய்வானை தனது நாட்டுடன் ஒன்றுசேர்க்கும் வாய்ப்பு இருப்பதை சீனா நிராகரிக்கவில்லை. தாய்வானின் வான் பாதுகாப்பு மண்டலம், தாய்வான் ஜலசந்தி மற்றும் சீன பெருநிலப்பரப்பின் ஒரு பெரும் பகுதியை அடக்கியுள்ளது. சீனா மற்றும் தாய்வானுக்கு இடையே உள்ள அதிகாரபூர்வமற்ற எல்லையை கடப்பதை தாய்வான் ஊடுறுவலாகதான் பார்க்கிறது.

தாய்வானை சீனா 2025ஆம் ஆண்டிற்குள் முழுவதுமாக கைப்பற்றி இருக்கும் என்றும் தாய்வானின் பாதுகாப்புத் துறை அமைச்சர் சுகோ செங் தெரிவித்துள்ளார். அவர் தைபேயில் பாராளுமன்ற கமிட்டியின் சார்பாக பேசினார். அமைச்சர் செங் ஏவுகணைகள் மற்றும் போர்க்கப்பலை உருவாக்கும் பல மில்லியன் டொலர் மதிப்பிலான வரைவு ஒன்றையும் பரிசீலிக்குமாறு தெரிவித்துள்ளார்.

சீனாவிடம் தாய்வானை ஆக்கிரமிக்கும் திறன் ஏற்கனவே உள்ளது என்று ஒப்புக் கொண்டுள்ள அவர் வரும் வாரங்களில் அது மேலும் எளிதானதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார். ஆனால், அது எவ்வாறு என்று அவர் விளக்கவில்லை.

> **அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சீன அதிபர் ஷி ஜின்பின், "தாய்வான் ஒப்பந்தத்தை" கடைப்பிடிப்பார் என்று தெரிவித்திருந்தார். அதிகாரப்பூர்வமாக சீனா என்பது "ஒரே நாடு" என்ற கொள்கையை அமெரிக்கா கடைப்பிடிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.**

1949ஆம் ஆண்டு சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு தாய்வான் சீனாவிடமிருந்து பிரிந்தது. தாய்வான், ஒரு சுயாதீன நாடு என்பதை அதிகாரபூர்வமாக அறிவிக்கும் முயற்சிகளை நோக்கி அந்நாடு நகர்வது சீனாவுக்கு ஒரு பெரும் கவலையாகவே உள்ளது என்றும் அதன் அதிபர் சார் இங்வென் அது நோக்கிய எந்த நடவடிக்கை எடுப்பதையும் சீனா தடுக்கிறது எனவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் சமீபத்திய இந்த செயல் குறித்து தாய்வானுடன் நெருக்கமாக இருக்கும் பல மேற்கத்தைய நாடுகளும் கவலை தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சீன அதிபர் ஷி ஜின்பின், "தாய்வான் ஒப்பந்தத்தை" கடைப்பிடிப்பார் என்று தெரிவித்திருந்தார். அதிகாரபூர்வமாக சீனா என்பது 'ஒரே நாடு' என்ற கொள்கையை அமெரிக்கா கடைப் பிடிக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.

இருப்பினும் இந்த ஒப்பந்தம் அமெரிக்கா தாய்வானுடன் ஓர் அதிகாரபூர்வமற்ற உறவை மேற்கொள்ள அனுமதிக்கிறது. அமெரிக்க - தாய்வான் உறவுகள் குறித்த சட்டம் தாய்வானின் பாதுகாப்புக்கு அமெரிக்கா உதவ வேண்டும் என்று கூறுகிறது எனவே அமெரிக்கா தாய்வானுக்கு ஆயுதங்களை விற்பனை செய்கிறது.

சமீபத்திய நாட்களில் இருநாட்டு உறவுகள் மோசமாக இருந்தாலும், 1996ஆம் ஆண்டு இருந்த அளவுக்கு மோசமாகவில்லை. அப்போது சீனா தாய்வானின் அதிபர் தேர்தலை ஏவுகணை சோதனைகளை கொண்டு தடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது. ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

### முன்னோடி வினாத்தாள் 3 - II

| | | |
|---|---|---|
| 1. | (i) வறட்சி | (1 புள்ளி) |
| | (ii) அனல் காற்றினால் | (1 புள்ளி) |
| | (iii) வற்றிவறண்டு | (1 புள்ளி) |
| | (iv) மூத்த | (1 புள்ளி) |
| | (v) சௌகரியமான | (1 புள்ளி) |
| | (vi) மூத்த கிராமவாசிகள் | (1 புள்ளி) |
| 2. | (i) (3) கூவுகின்றன | (1 புள்ளி) |
| | (ii) (1) பெற்றோர் | (1 புள்ளி) |
| 3. | (i) வெற்றி அடைதல் | (1 புள்ளி) |
| | (ii) ஆபத்தில் கைவிடல் | (1 புள்ளி) |
| 4. | (i) "அங்குள்ள சிற்பங்களைத் தொட வேண்டாம்" என்று காவலாளி கூறினான். | (1 புள்ளி) |
| | (ii) திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மாலை நேர வகுப்புக்கள் நடைபெறும். | (1 புள்ளி) |
| 5. | இலங்கையின் பழைமையான நகரங்களுள் அநுராதபுரமும் ஒன்றாகும். | (1 புள்ளி) |
| 6. | (i) விழுந்தன | (1 புள்ளி) |
| | (ii) அலங்கரிக்கப்பட்டிருந்தது | (1 புள்ளி) |
| | (ii) அழகானது | (1 புள்ளி) |
| 7. | சகபாடி | (1 புள்ளி) |
| 8. | (i) ஆராய்ச்சி | (1 புள்ளி) |
| | (ii) பன்னிரண்டு | (1 புள்ளி) |
| 9. | (i) ஐந்து / 5 | (1 புள்ளி) |
| | (ii) இருநூற்று நாற்பத்தேழு / 247 | (1 புள்ளி) |
| 10. | ஏறு | (1 புள்ளி) |
| 11. | (i) a | (1 புள்ளி) |
| | (ii) a | (1 புள்ளி) |
| 12. | (i) watch / WATCH / Watch | (1 புள்ளி) |
| | (ii) balloon / BALLOON / Balloon | (1 புள்ளி) |
| 13. | (i) She is reading a book | (1 புள்ளி) |
| | (ii) That is a small house | (1 புள்ளி) |
| 14. | (i) பஹுலொவ / பகலொவ | (1 புள்ளி) |
| | (ii) தஹுஹுன / தககுன | (1 புள்ளி) |
| 15. | நீங்கள் யார்? | (1 புள்ளி) |
| 16. | முப்பத்து இரண்டாயிரத்துப் பதினைந்து | (2 புள்ளிகள்) |
| 17. | 3045 | (2 புள்ளிகள்) |
| 18. | 8400, 8280, 7401, 7275 | (2 புள்ளிகள்) |
| 19. | 10, 850 | (2 புள்ளிகள்) |
| 20. | 12 | (2 புள்ளிகள்) |
| 21. | (i) 6 / ஆறு | (1 புள்ளி) |
| | (ii) 12 / பன்னிரண்டு | (1 புள்ளி) |
| 22. | தென்மேற்கு | (2 புள்ளிகள்) |
| 23. | மு.ப. 9.15 | (2 புள்ளிகள்) |
| 24. | (i) 1273 | (2 புள்ளிகள்) |
| | (ii) 209 | (2 புள்ளிகள்) |
| 25. | 575 | (2 புள்ளிகள்) |
| 26. | 9 | (2 புள்ளிகள்) |
| 27. | 7, 10, 13, 16, 19 | (2 புள்ளிகள்) |
| 28. | 9 | (2 புள்ளிகள்) |
| 29. | (i) தேன்குழல், 7 | (2 புள்ளிகள்) |
| | (ii) 3 | (2 புள்ளிகள்) |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30. (3) | 31. (2) | 32. (2) | 33. (2) | 34. (3) | 35. (1) | 36. (3) | 37. (3) | 38. (2) | 39. (2) |
| 40. (2) | 41. (3) | 42. (3) | 43. (1) | 44. (1) | 45. (3) | 46. (1) | 47. (3) | 48. (1) | 49. (1) |
| 50. (3) | 51. (1) | 52. (1) | 53. (2) | 54. (2) | 55. (1) | 56. (1) | 57. (3) | 58. (1) | 59. (2) |

(30 புள்ளிகள்)

60. பொருத்தமான வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக. தான் விரும்பும் விளையாட்டு எது? அது ஏன் எனக்கு விருப்பம்? என்பன போன்ற வினாக்களுக்கு விடையாக அமையும் வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக. வாக்கியமொன்றில் ஓர் எழுத்துப் பிழை இருப்பின் அவ்வாக்கியத்திற்கு 1 புள்ளி மாத்திரம் வழங்குக. ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகள் இருப்பின் அவ்வாக்கியத்திற்குப் புள்ளி வழங்க வேண்டாம். (6 புள்ளிகள்)

முழுவிடைத்தாளையும் கருத்திற்கொண்டு தெளிவான எழுத்து, நேர்த்தி என்பவற்றிற்கு மொத்தமாக 1 புள்ளி வழங்குக.

# மாணவர்கள் வீட்டில்; ஆசிரியர்கள் வீதியில் இதுதான் ராஜபக்ஷ அரசின் பெரும் சாதனை

## சபையில் ஐக்கிய மக்கள் சக்தி சாடல்



கொழும்பு, ஒக். 08

"இரு வருடங்களாக மாணவர்கள் வீட்டில் இருக்கின்றனர். ஆசிரியர்கள் வீதியில் இருக்கின்றனர். இதுதான் இந்த ராஜபக்ஷ அரசின் பெரும் சாதனையும் நாட்டின் பெரும் வேதனையும்."

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்தது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட கூற்றொன்றை முன்வைத்த ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. துஷார இந்துனில், இன்று (நேற்றுமுன்தினம்) ஆசிரியர் தினம். ஆனால், ஆசிரியர்கள் வீதியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். எனவே, ஆசிரியர்களின் போராட்டம் தொடர்பில் பாராளுமன்றம் கவனம் செலுத்த வேண்டும்" - என்றார்.

இதையடுத்து எழுந்த ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. ரஞ்சித் மத்தும பண்டார, "கடந்த இரு வருடங்களாக மாணவர்கள் வீட்டில் இருக்கின்றனர். ஆசிரியர்கள் வீதியில் இருக்கின்றனர். இரு தரப்பினரின் பிரச்னைகளுக்கும் இந்த அரசிடம் தீர்வில்லை. இதுதான் இந்த ராஜபக்ச அரசின் பெரும் சாதனையும் நாட்டின் பெரும் வேதனையும். மாணவர்களின் எதிர்கால வீணடிக்கப்படுகின்றது. எனவே, இது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" - என்றார். (இ)

# மேலும் 66 பேர் கைது!

கொழும்பு, ஒக். 08

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 66 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 80 ஆயிரத்து 188 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் வெளியேறும் 13 இடங்களில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 82 வாகனங்களில் வந்த 160 திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. (இ)




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது அமர்வு நேற்று காலை 9 மணிக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். ஸ்ரீசற்குணராஜா தலைமையில் நிகழ்நிலையில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

நாட்டில் நிலவும் கொரோனா பெருந்தொற்று நிலைமைகள் காரணமாக பட்டமளிப்பு விழாவில் பெருமளவானோர் ஒன்று கூடுவதற்கு அனுமதிக்க முடியாது என்றும் அதனை நிகழ் நிலையில் நடாத்துவதற்குத் தடை ஏதுமில்லை என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தியிருந்த நிலையில் மாணவர்களின் பட்டங்களை உறுதிப்படுத்துவதற்காக நேற்று இடம்பெற்ற நிகழ்நிலை பட்டமளிப்பு விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை...

# விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 08

லொறி ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் திருகோணமலை - தம்புள்ளை வீதி, ஹிரிவடுன்ன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்தினர் ஹபரண வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

ஹபரண பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இதேவேளை, விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ)

## முகக்கவசம் அணியுமாறு கூறிய

# எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்மீது கடும் தாக்குதல்

கொழும்பு, ஒக். 08

முகக்கவசம் அணியுமாறு கூறியதால், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் தாக்கப்பட்ட கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மீகொடை புதிய வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலாளி முகக்கவசமின்றி எரிபொருள் நிலையத்துக்கு வருகை தந்துள்ளார். இதன்போது அவரை முகக்கவசம் அணியுமாறு அங்கிருந்த பணியாளர் வலியுறுத்தியுள்ளார்.

அதனால் கோபமுற்ற சம்பந்தப்பட்ட நபர் மற்றுமொரு நபருடன் வந்து அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த நபரைக் கணபதி தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான நபர், பாதுக்கை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக களுபோவில வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (இ)

# உள்நாட்டு துப்பாக்கியுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்

தெணியாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பகஹ ஹேக பிரதேசத்தில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட் டுள்ளார்.

பெலிஅத்தகும்புர அம்பஹதேன பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

ஈழநாடு





### தாய்லாந்தில் கடும் மழை:

## வரலாற்று சிறப்பு நகரம் வெள்ளத்தில் மூழ்கியது!

தைபே, ஒக். 08

தாய்லாந்தில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் கடும் மழையால் வரலாற்று சிறப்பு பெற்ற நகரமான ஆயுத்தாயா வெள்ளத்தில் மூழ்கியது. அந்த நகரத்தி லுள்ள ஏராளமான வணக்க தலங்கள் தண்ணீருக்குள் சென்றுவிட்டன.

இது தொடர்பில் அந்த நாட்டு ஊடகங்கள் வெளி யிட்ட தகவலின்படி, "கடந்த இரு வாரங்களாக பெய்த கடும் மழையால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பழமையும் வரலாற்று சிறப்புமிக்கதுமான ஆயுத்தாயா நகரம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. சுமார் 40இற்கும் அதிகமான வணக்க தலங்கள் வெள்ளத்தால் மூழ்கடிக் கப்பட்டன. கடந்த 10 ஆண்டுகளில் தாய்லாந்து கண்டி ராத பெரு வெள்ளம் இதுவாகும்.

இதேவேளை, கனமழையால் 32 மாகாணங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. 9 பேர் இதுவரை பலியாகி னர். 3 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந் துள்ளனர்.", என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

# மலேரியா நோய் தடுப்பூசிக்கு சுகாதார ஸ்தாபனம் அனுமதி!

ஜெனிவா, ஒக். 08

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதகுலத்தின் மிகப்பெரிய பேரிடர் களில் ஒன்றாக இருந்து வரும் மலே ரியாவுக்கு தடுப்பூசியைக் கண்ட றிந்து மருத்துவ உலகம் மற்றொரு பெரும் சாதனையை படைத்துள் ளது. உலக சுகாதார அமைப்பால் நேற்று அங்கீகரிக்கப்பட்ட உலகின் முதல் மலேரியா தடுப்பூசி முதன் முறையாக ஆபிரிக்க குழந்தைக ளுக்கு செலுத்தப்படவுள்ளது.

கொடிய மலேரியா நோய்க்கு எதிரான போராட்டத்தில் ஒரு வர லாற்று தருணமாக இந்தத் தடுப் பூசி அமைந்துள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதகுலத்தின் மிகப் பெரிய பேரிடர்களில் ஒன்றாக மலே ரியா இருந்து வருகிறது. சிறுவர் மற் றும் குழந்தைகளின் மரணத்தில் பெரும் தாக்கம் செலுத்தும் நோயாக மலேரியா உள்ள நிலையில் இதற்கான தடுப்பூசி வரலாற்று முக்கியத்து வம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலான கடும் முயற்சிகளுக்கு பின்னர் மருத் துவ உலகின் மிகப்பெரிய சாதனை களில் ஒன்றாக மலேசியா தடுப்பூசி கண்டறியப்பட்டுள்ளது. மலேரியா காய்ச்சலை தடுப்பதற்கான இந்தத் தடுப்பூசியை கிளாக்ஸோ ஸ்மித்



கிளைன் நிறுவனம் கடந்த 1987இல் உருவாக்கியது. அந்த தடுப்பூசியின் செயல்திறன் குறைவாக இருந்த தால், அதை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மொஸ்குயிரிக்ஸ் (Mosquirix - RTS,S/AS01) என அழைக்கப்படும் இந்தத் தடுப்பூசி ஆறு ஆண்டுக ளுக்கு முன்பு பயனுள்ளதாக நிரூபிக் கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, கடந்த 2019-இல் இருந்து கானா, கென்யா, மலாவி ஆகிய நாடுகளில் 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட சிறு வர்களுக்கு மலேரியா தடுப்பூசி செலுத் தப்பட்டு ஆராய்ச்சி மேற் கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுகளின் பின்னர் இந் தத் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு நேற்றுமுன்தினம் அனு மதி வழங்கியுள்ளது. அத்துடன், ஆபிரிக்காவிலும் மற்றும் மிதமான மற்றும் அதிக மலேரியா தொற்று ஆபத்துள்ள பகுதிகளிலும் முதலில் இந்தத் தடுப்பூசி போடப்பட வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து மகிழ்ச்சி வெளியிட்டுள்ள உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானம் கேப்ரியே சஸ், இது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம் எனத் தெரிவித்துள்ளார்.

## சீனாவுடன் அமெரிக்கா நிச்சயம் போர் செய்யும்!

### முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப்

வாஷிங்டன், ஒக். 08

"சீனாவுடன் அமெரிக்கா நிச்சயம் போர் செய்யும்", என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

"தேர்தல் மோசடி செய்யப்பட்டமை யால் அமெரிக்கா இப்போது பலவீன மான மற்றும் ஊழல்நிறைந்த தலை மையை கொண்டுள்ளது. இதனால், சீனா அமெரிக்காவை மதிப்பதில்லை. சீனா வுடன் அமெரிக்கா நிச்சயம் போர் செய் யும்", என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகளின் வெளியேற்றத் தையும் அவர் கடுமையாக விமர்சித்தார். தலிபான்களிடம் அமெரிக்கா சரண டைந்து விட்டது என்றும் அவர் குறிப் பிட்டார்.

இதேவேளை, அமெரிக்காவும் சீனா வும் கடந்த சில வருடங்களாக எதிரி மனப்பான்மையுடன் செயல்படுகின்றன. வர்த்தகம், கொரோனா தொற்று பரவல், தென் சீன கடல் விவகாரம் மற்றும் சீனாவின் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் இரு நாடுகளும் பனிப் போரில் ஈடுபடுகின்றன என்பதும் குறிப் பிடத்தக்கது. (ஐ)





கொங்கோ காட்டில் 'செல்பி' எடுக்க 'போஸ்' கொடுத்து புகழ்பெற்ற நடாகாஷி என்ற கொரில்லா நோயால் பராமரிப்பாளரின் மடியில் உயிரை விட்டது.

## பாகிஸ்தானில் நிலநடுக்கம் 20 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானின் பலுகிஸ்தான் மாகா ணத்தில் நேற்று வியாழக்கிழமை ஏற் பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர். அத்துடன், குறைந்தது 150 பேர் காயமடைந்த நிலையில் மேலும் நூற்றுக்கணக்கானோர் கட்டட இடி பாடுகளுக்குள் சிக்கி உள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்கள் மற்றும் இடி பாடுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அணர்த்த முகாமைத்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நிலநடுக்கத்தை அடுத்து குவெட்டா நகரில் உள்ள மக் கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதி களில் தஞ்சமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானிலுள்ள பலுகிஸ்தான் மாகாணத்தின், ஹார்னாய் பகுதியை மையமாக கொண்டு, நேற்று அதிகாலை 3.30 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகளில் 5.7 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால், கட்ட டங்கள் இடிந்து விழுந்து அதில் சிக்கில் அதிக உயிரிழப்புக்கள் ஏற்பட்டன.

# நாஸி முகாமில் 3,518 பேர் கொலை; 100 வயது காவலர்மீது விசாரணை!

பேர்லின், ஒக். 08

இரண்டாம் உலகப் போர் முடிவ டைந்து 76 ஆண்டுகளின் பின்னர் நாஸி வதை முகாமில் 3, 518 பேரை கொலை செய்ய உதவினார் என்ற குற்றச்சாட்டில் 100 வயது காவலர் விசாரணையை எதிர் கொண்டுள்ளார்.

ஜேர்மனி தலைநகர் பேர்லின் அருகே ஹிட்லர் ஆட்சியின்போது சாக்சென் ஹசன் வதைமுகாமில் 2 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அடைத்து வைக்கப் பட்டிருந்தனர். அந்த முகாமில் தற்



போது 100 வயதான ஜோசப் எஸ் என்ற நபர் காவலராக பணியாற்றியிருந்தார். அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த

சோவியத் ஒன்றிய கைதிகளை சுட்டுக் கொல்லவும் பிற கைதிகளை நச்சுவாயு செலுத்தி கொல்லவும் அவர் உதவினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

நாஸி கால குற்றத்துக்கா விசார ணையை எதிர்கொள்ளும் மிகவும் வய தான நபர் இவராவார். இவரின் முழுப் பெயர் தனியுரிமை சட்டத்தின் பிரகாரம் வெளியிடப்படவில்லை. ஜோசப் எஸ் என்றே குறிப்பிடப்படுகின்றார். 21 வயதில் இவர் காவலராக இணைந்தி ருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஹர்சல் பட்டேல் புதிய சாதனை

அபுதாபி, ஒக். 08

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் ஒரே தொடரில் அதிக விக்கெட்கள் வீழ்த்திய இந்திய பந்து வீச்சாளர்கள் பட்டியலில் பும்ராவை பின்னுக்குத் தள்ளியுள்ளார் ஹர்ஷல் பட்டேல்.

பெங்களூர் அணிக்காக விளையாடி வரும் ஹர்ஷல் பட்டேல் நேற்றுமுன்தினம் ஹைதரா பாத்துக்கு எதிரான போட்டியில் 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

இதன்மூலம் இந்தத் தொடரில் 29 விக்கெட் களை வீழ்த்தியுள்ளார். பும்ரா கடந்த சீசனில 27 விக்கெட்கள் வீழ்த்தியிருந்தார். இதுதான் ஒரு தொடரில் இந்திய பந்து வீச்சாளர்கள் வீழ்த்திய அதிக விக்கெட்டாக இருந்தது. தற்போது ஹர்ஷல் பட்டேல் இந்த சாதனையை முறியடித் துள்ளார். (ஐ)

# கரனுக்கு பதில் டொமினிக்

அபுதாபி, ஒக். 07

சென்னை அணியிலிருந்து இங்கிலாந் தின் சகலதுறை வீரர் சாம் கரன் விலகிய மையை தொடர்ந்து மேற்கிந்தியத் தீவுகளின் டொமினிக் ட்ரேக் சேர்க்கப் பட்டுள்ளார்.

சாம் கரன் முதுகுவலி காரணமாக ஐ. பி. எல். தொடரிலிருந்தும், இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்தும் விலகினார்.

இந்த நிலையில், அவருக்கு பதிலாக சர்வதேச போட்டிகளில் முன்னனுப வமற்ற மேற்கிந்தியத் தீவுகளின் டொமி னிக் ட்ரேக்கை சென்னை அணி சேர்த்துள்ளது. முதல்தர போட்டிக ளிலும், 19 இருபது - 20 போட்டிகளி லும் விளையாடிய டொமினிக் ட்ரேக் இடதுகை துடுப்பாட்ட வீரரும் இடதுகை மிதவேக பந்துவீச்சாளரும் ஆவார்.



# ஹைதராபாத் இறுதிநேர அதிரடி பெங்களூர் அணியை வீழ்த்தியது



அபுதாபி, ஒக். 08

பந்துவீச்சாளர்களின் அசாத்திய செயல்பாட்டால் ஹைதராபாத் அணி இந்த ஆண்டில் தனது மூன்றாவது வெற்றியை பதிவு செய்துள்ளது. நேற்று முன்தினம் இரவு பெங்களூர் அணியை 4 ஓட்டங்களால் வீழ்த்தியதன் மூலமே இந்த வெற்றியை அந்த அணி பெற்றது.

அபுதாபியில் நடந்த ஐ. பி. எல். தொடரின் 52ஆவது போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் முதலில் களத்தடுப்பில் ஈடு பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி 7 விக்கெட்களை இழந்து 141 ஓட்டங்களை சேர்த்தது. 142 ஓட்ட இலக்கை நோக்கித் துடுப்பெடுத் தாடிய பெங்களூர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 137 ஓட்டங்களையே பெற்றது.

விராட் கோலி, ஏபி டி வில்லியர்ஸ், கிளன் மக்ஸ்வெல், தேவ்தத் படிக்கல் போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் இருந்தும் பெங்களூர் அணி தோல்வி யைத் தழுவியிருக்கிறது. மூன்றாவது அல்லது நான்காவது இடத்தில் கள மிறங்கி வந்த வில்லியர்ஸ் ஆறாவது இடத்தில் இறங்கியமையும் அந்த அணி யின் பின்னடைவுக்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

தொடக்கம் கொடுத்த கோலி, 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த நிலை யில், படிக்கல் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மெதுவான துடுப் பாட்டத்தை வெளிப்படுத்திய அவர் 52 பந்துகளில் 41 ஓட்டங்களைப் பெற்றார்.

ஐந்தாவது வீரராக களமிறங்கிய மக்ஸ்வெல் மட்டும் அதிரடி காட்டி னார். 25 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், இரு சிக்ஸர்களை அடித்த அவர் 40 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இறுதி 3 ஓவர்களில் பெங்களூர் அணிக்கு 29 ஓட்டங்கள் தேவை என்ற நிலை இருந்தது. 18ஆவது ஓவரை உம்ரன் மலிக் வீசினார். அந்த ஓவரில் ஷ ாபாஸ் அஹமட் 2 பௌண்ட்ரிகளுடன் 11 ஓட்டங்களை எடுத்தார்.

இதனால், இறுதி இரு ஓவர்களில் 18 ஓட்டங்களை பெறவேண்டிய நிலை, ஜசன் ஹோல்டர் 19ஆவது ஓவரை வீசினார். ஹோல்டர் 5 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்தார்.

இறுதி ஓவரில் 13 ஓட்டங்களே தேவைப்பட்டது. கார்டன், ஏபி டி வில்லியர்ஸ் களத்தில் இருந்தனர். புவனேஷ்வர் குமார் பந்து வீசினார். முதல் பந்தை கார்டன் எதிர்கொண்டார். இரண்டாவது பந்தில் ஓர் ஓட்டம் எடுக்கப்பட்டது. மூன்றாவது பந்தை ஏபி டி எதிர் கொண்டார். அந்தப் பந்தில் ஓட்டம் எதுவும் எடுக்கப்படவில்லை. நான்காவது பந்தில் வில்லியர்ஸ் சிக்ஸர் விளாசினார். இதனால், ஆட்டம் பரபரப்பானது.

ஐந்தாவது பந்து முழுஅளவில் பாய்ந்து வர அதனை வில்லியர்ஸால் அடிக்க முடியவில்லை. இறுதிப் பந்தில் வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவைப்பட் டது. அந்தப் பந்தும் முழுஅளவாக வீசினார் புவனேஷ்வர். அதில் ஓர் ஓட்டத் தையே வில்லியர்ஸால் பெறமுடிந்தது.

இதனால், 4 ஓட்டங்களால் ஹைதரா பாத் அணி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியிலும், இறுதிப் போட்டியிலும் பெங்களூர் வெற்றி பெற்றால் முதலிரு இடங்களை உறுதி செய்துவிடலாம் என்று

ஹைதராபாத்தின் சார்பில் பந்துவீசிய புவனேஷ்வர் குமார், ஜசன் ஹோல்டர், சித்தார்த் கவுல், உம்ரன் மலிக், ரஷீத் கான் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினாலும் கட்டுக்கோப்பான பந்துவீச்சின் மூலம் அணிக்கு வெற்றியை தேடிக் கொடுத்தனர்.

முன்னதாகத் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணிக்கு ஜசன் றோய், வில்லிம்ஸன் ஆகியோரே துடுப்பாட் டத்தில் நம்பிக்கை கொடுத்தனர். ஏனைய வீரர்களுக்கு இரு வரிசை இலக்கத்தை தொடுவதே பகீரதப் பிரயத்தனமாக இருந்தது.

றோய் 38 பந்துகளில் 5 பௌண்ட்ரி களுடன் 44 ஓட்டங்களையும், வில்லியம் சன் 4 பௌண்ட்ரிகளுடன் 31 ஓட்டங் களையும் எடுத்தனர். நடுவரிசை வீரர்கள் எவரும் சோபிக்கவில்லை.

பெங்களூரின் பந்துவீச்சில் ஹர்சல் பட்டேல் 3, டான் கிறிஸ்ரியன் 2 விக் கெட்களை அதிகபட்சமாக வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக இரு பிடி யெடுப்பு மற்றும் ஒரு 'ரன் அவுட்' ஆட்ட மிழப்புகளை செய்து 31 ஓட்டங்களை யும் எடுத்த கேன் வில்லியம்சன் தெரிவா னார். (ஐ)



# உள்ளக பொறிமுறையின் விசித்திரத்துக்கு லொஹானின் அராஜகம் ஓர் எடுத்துக்காட்டு

## கூட்டமைப்பின் எம்.பி. கருணாகரம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 08

"உள்நாட்டுப் பொறிமுறையின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என ஜனாதிபதி, ஐ.நா. பொதுச் சபையில் பேசி மூச்சு விடுவதற்கு முன்னர் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு மனித உரிமைகளின் மாண்பையும் சிறைக்கைதிகளின் நலன்களையும் சிறப்பாகக் கவனித்தார். இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறையின் விசித்திரத்துக்கு லொஹானின் அராஜகம் ஓர் எடுத்துக்காட்டு."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"புலம்பெயர் தமிழ் அமைப்புக்களைத் தடை செய்துவிட்டு, அவர்களைப் பேச்சுக்கு ஜனாதிபதி அழைத்திருப்பது நகைச்சுவையானது. ஜனாதிபதியின் புத்தி மங்கியுள்ளதையே இது காட்டுகின்றது. கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவானாம். அதுபோலவே



ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஜனாதிபதியின் உரை தமிழ் மக்களுக்கு வைகுண்டம் போகும் கதையாக இருக்கின்றது.

உள்நாட்டுப் பொறிமுறையின் ஊடாக இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பேன் என ஜனாதிபதி ஐ.நாவில் பேசி மூச்சு விடுவதற்கு முன்னர் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு மனித உரிமைகளின் மாண்பையும் சிறைக்கைதிகளின் நலன்களையும் சிறப்பாகக் கவனித்தார். இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறையின் விசித்திரத்துக்கு லொஹானின் அராஜகம் ஓர் எடுத்துக்காட்டு."

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 13 ஆவது திருத்தச் சட்டம் போதாது. 13 பிளஸுக்குச் செல்வேன் என்றார். எதை எப்படிப் பேசி சர்வதேச சமூகத்தை நமது ஆட்சியாளர்கள் தம் வசப்படுத்துகிறார்கள் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

முன்னாள் ஜனாதிபதிகளான டி.எஸ்.சேனாநாயக்க முதல் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வரையில் எவருக்கும் நாடு தொடர்பில் ஒரு பொதுவான கொள்கை இல்லை. ஒரு முகம் இல்லை. நாட்டின் பல்லினத் தன்மையை ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் இல்லை" - என்றார். (இ)

## மரண அறிவித்தல்

மலர்வு
20 - 10 - 1931



உதிர்வு
06 - 10 - 2021

### திருமதி ஜெயலஷ்மி ஞானப்பிரகாசம்

யாழ்.கொட்டடியைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலஷ்மி ஞானப்பிர காசம் அவர்கள் 06-10-2021 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சந்திரசேகரம் கண்மணிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சண்முகம் நாகரெத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற திரு. சண்முகம் ஞானப்பிரகாசம் (ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்/ யாழ்.மாவட்ட சிக்கன கடன் கூட்டுறவு சங்கள்களின் ஸ்தாபகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஈஸ்வரி, அம்பிகாவதி, தவராசா, சோமசேகரம், குமரகுரு, மற்றும் பாலதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்றவர்களான யோகாம்பிகை, அன்னலஷ்மி, மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,ஞானசூரியர்(மோகன்), விஜயஞானம்(மோகனா), மனோகரி (வதனா- சுரவா), அர்ஜுனா ஆகியோரின் அருமைத் தாயாரும், பவானி (வசந்தா), வரதராஜன், ஜெயசிங்கம், சறோஜினி(ரோகினி) ஆகியோரின் அருமை மாமியாரும்,கார்த்தீபன், கௌசினி, கௌசிகன், ஞானதீபன், பிரசாந்தி- சித்தார்த், பிரதீபன்- நிசா, சுலோசனாதேவி, ஜெயந்தன்- ஜெனீன், பிரகாசம், சுந்தர், றமணன், அஸ்வினி, வானதி ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும்,காயத்திரி, கார்த்திக், துளசி, பிரவீன், மாயா, ஜெய்லன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 09 Oct 2021 6:00 PM - 9:00 PM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada

கிரியை
Sunday,10 Oct 2021 7:00 AM - 9:00 AM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr,Etobicoke,ON M9W 5A8, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Saturday, 09 Oct 2021 Visitation
Zoom Meeting ID: 856 0321 5789
Passcode: 755396

Sunday, 10 Oct 2021 Funeral Service
Zoom Meeting ID: 881 6031 7215
Passcode: 859415

தொடர்புகளுக்கு:
அர்ஜுனா (மகன்) : +16479641427

தகவல்:
குடும்பத்தினர்.

# நாடு முக்கியமா? சாப்பாடு முக்கியமா? சபையில் அரசு - எதிரணி வாய்த்தர்க்கம்



கொழும்பு, ஒக். 08

நாடு முக்கியமா, சாப்பாடு முக்கியமா என்று சபையில் அரச - எதிரணிக்கிடையில் எழுந்த சர்ச்சையில் சாப்பாடுதான் முக்கியம் என்ற அரச தரப்பின் கருத்தே வெற்றி பெற்றது.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் காலை 10 மணிக்குக் கூடிய நிலையில் முற்பகல் 11 மணி வரையும் வாய்மூல விடைக்கான வினாவுக்கான நேரம் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 11 மணிக்கு பெற்றோலிய வளங்கள் தொடர்பான விவாதம் ஆரம்பிக்கப்படவிருந்தது. ஆனால், வெள்ளைப்பூண்டு, லிற்றோ காஸ் தொடர்பில் அரச - எதிர்க்கட்சியினரிடையில் நீண்ட நேரமாக வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் எதிர்க்கட்சி தெரிவித்த குற்றச்சாட்டுக்கு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன நீண்ட விளக்கம் ஒன்றை வழங்கிக் கொண்டிருந்தார். ஆனால், முக்கியமான விவாதம் இருக்கின்றது எனவும், அமைச்சர் நேரத்தை வீணடிக்கின்றார் எனவும் கூறி இதற்கு எதிர்க்கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால், அரசு தரப்பினர் அமைச்சருக்கு விளக்கமளிக்கும் உரிமை உள்ளது என வாதிட்டு அமைச்சரை விளக்கமளிக்க அனுமதிக்குமாறு சபாநாயகரைக் கோரினர்

அப்படியானால் அமைச்சர் நீண்ட நேரம் விளக்கமளிப்பதானால் பிற்பகல் 12.30 மணியிலிருந்து 1.30 மணிவரையிலான உணவுக்கான நேரத்தையும் விவாதத்துக்கு எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சியினர் சபாநாயகரிடம் கோரினர். ஆனால், அவ்வாறான கோரிக்கை அரச தரப்பிடமிருந்தே விடுக்கப்பட வேண்டுமென சபாநாயகர் கூறினார்.

ஆனால், உணவுக்கான நேரத்தை விவாதத்துக்கு எடுக்க அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். தாம் உணவருந்த நேரம் வேண்டும் என்றார். அப்போது எழுந்த எதிர்க்கட்சி எம்.பி. நளின் பண்டார, "நாம் நாடு முக்கியம் என்கின்றோம்.



அமைச்சர் சாப்பாடு முக்கியம் என்கிறார். நாடா, சாப்பாடா முக்கியம் என்பதனை சபாநாயகரின் முடிவில் பார்ப்போம்" என்றார்.

இந்நிலையில் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாக வேண்டிய பெற்றோலிய வளங்கள் தொடர்பான விவாதம் 12.15 மணியளவிலேயே ஆரம்பமானது. விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரான உதய கம்மன் பில உரையாற்றிக்கொண்டிருந்த போது 12.30 மணிக்கு உணவு நேரத்துக்காக சபை நடவடிக்கை 1.30 ணி வரை ஒத்திவைக்கப்படுகின்றது எனச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்து சபையை உணவுக்காக ஒத்திவைத்தார். ஆக நாடா, சாப்பாடா முக்கியம் என்ற எதிர்க்கட்சியின் கேள்விக்கு சாப்பாடுதான் முக்கியம் என்ற பதிலே சபை ஒத்திவைப்பின் மூலம் கிடைத்தது. (இ)

# இருவேறு வாகன விபத்துகளில் வயோதிபர்கள் இருவர் மரணம்!

கொழும்பு, ஒக். 08

மதவாச்சி, அக்போபுர ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் வயோதிபர்கள் இருவர் மரணமடைந்தனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக மதவாச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணலாறு சந்திக்கு அருகில் கார் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபர் உயிரிழந்தார்.

கினிகட்டுவ ரஹோவ பிரதேசத்தைச் சேர்ந்த 73 வயது வயோதிபரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய காரின் சாரதியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது மற்றுமொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் இரு மோட்டார் சைக்கிள்களின் செலுத்துநர்களும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

அக்போபுர பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயது வயோதிபரே இவ்வாறு உயிரிழந்தார்.

(இ)

## ஈழநாடு ஆசிரியர்...

பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஒரு குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றார். இந்த குற்றச்சாட்டை முன்வைப்பதற்காகவே, **6.10.2021** அவர் பிரத்தியேக ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்தியிருந்தார்.

**3.10.2021** அன்று, யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார செயலர் ஹர்ஸ் வர்தன், யாழ்ப்பாணத்திலுள்ள அரசியல் பிரமுகர்கள், புத்திஜீவிகள் மற்றும் வர்த்தக பிரதிநிதிகள் என பலதரப்பட்டவர்களையும் ஒரிடத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன் போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே, ஈழநாடு குறித்த ஆசிரியர் தலையங்கத்தை வரைந்திருந்தது. நவீன பத்திரிகையியலில், ஆசிரியர் தலையங்கங்கள் பல வகையானவை. ஒரு தகவலை அடிப்படையாகக் கொண்டு (Editorial of Information) எழுதும் முறையுண்டு. அதே வேளை ஒரு செய்தியின் அடிப்படையில் அரசியல் விடயங்களை விபரிக்கும், விமர்சிக்கும் (Editorial of Interpretation) முறையுண்டு. இந்த அடிப்படையில்தான், இன்றைய சூழலில் **13**ஆவது திருத்தச்சட்டத்தை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் நோக்கில், ஈழநாடு குறித்த ஆசிரியர் தலையங்கத்தை வரைந்திருந்தது. இந்திய வெளிவிவகாரச் செயலரின் சந்திப்பின் போது பிரிமாறப்பட்ட கருத்துக்களை இதற்காக நாம் பயன்படுத்தியிருந்தோம்.

தெளிவான புரிதலை ஏற்படுத்தும் வகையில், குறித்த ஆசிரியர் தலையங்கத்தில், **13**ஆவது திருத்தச்சட்டம் பற்றி நாம் குறிப்பிட்டிருந்த விடயத்தை மீளவும் இங்கு தருகின்றோம்.

“இதில் பங்குகொண்ட தமிழ்த் தேசிய பின்புலம் கொண்ட அரசியல் பிரமுகர்கள் சிலர், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான, **13**ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கின்றனர். இந்தியாவின் ஆதரவை கோரியிருக்கின்றனர். ஆனால், அவ்வாறு சிலர் கூறுகின்ற போது, அங்கு பங்கு கொண்ட எந்தவொரு அரசியல் பிரமுகரும் அதனை மறுதலித்து பேசவில்லை. இந்த அரசியல் பிரமுகர்களில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இருந்திருக்கின்றார். பொது வெளிகளில், **13**வது திருத்தச்சட்டத்தை தீவிரமாக எதிர்த்துவரும் அவர், வெளிவிவகாரச் செயலர், ஹர்ஸ் வர்தன் முன்னிலையில் அதுபற்றி வாய்திறக்கவில்லை”

இந்த விடயத்தின் அடிப்படையிலேயே கஜேந்திரகுமார் ஈழநாட்டின் மீது, குற்றம்சாட்டியிருக்கின்றார். இது தவறானதென்றும், தான் அங்கு ஒற்றையாட்சியின் அடிப்படையிலான அரசியல் தீர்வை இந்தியா வலியுறுத்தக்கூடாதென்று தெரிவித்தாரெனவும், தனது ஊடக சந்திப்பில் தெரிவித்திருக்கின்றார். ஆனால், அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்களிலிருந்தே எமது ஆசிரியர் தலையங்கத்தில் நாம் பதிவு செய்திருந்த விடயம் சரியானதென்பது உறுதியாகின்றது. ஏனெனில், குறித்த ஆசிரியர் தலையங்கத்தில் நாம் எந்தவோர் இடத்திலும், கஜேந்திரகுமார் ஒன்றையாட்சி தொடர்பில் பேசவில்லை என்று குறிப்பிடவில்லை ஆனால், அவர் **13**ஆவது திருத்தச்சட்டத்தை பற்றி ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ எதனையும் குறிப்பிடவில்லை என்பதையே நாம் பதிவு செய்திருந்தோம்.

ஒற்றையாட்சி முறைமையை எதிர்ப்பதை பொதுவாக தமிழத் தேசிய நிலைப்பாட்டில் இருக்கும் அனைத்து கட்சிகளுமே, பொதுவெளிகளில் வலியுறுத்தி வருகின்றன. எனவே இதில் புதிதாக ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஒற்றையாட்சி முறைமை நீக்கப்படும் காலம் வரவேண்டும் என்பதையே ஈழநாடும் எதிர்பார்க்கின்றது. எனவே ஒற்றையாட்சியை நீக்குவது தொடர்பில் ஈழநாட்டுக்கு எவ்வித அபிப்பிராய பேதமும் இல்லை. அதே வேளை, தற்போது தமிழ் மக்களுக்கு இருக்கும் ஒரேயொரு ஏற்பாடான **13**ஆவது திருத்தத்தையும் இழந்துவிக் கூடாது என்னும் இன்றைய யதார்த்தத்தை புறக்கணிக்க கூடாது - புறக்கணிக்க முடியாது என்பதையே, ஈழநாடு தொடர்சியாக வலியுறுத்திவருகின்றது.

புதுடில்லி தொடர்ந்தும் **13**ஆவது திருத்தச்சட்டத்தை மட்டுமே வலியுறுத்திவருகின்ற நிலையில், மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையிலும் அதுவே வலியுறுத்தப்பட்டிருக்கும் நிலையில், இதனை எவ்வாறு கடந்து செல்வது என்னும் கேள்வியிலிருந்தே எமது தலைவர்கள் விடயங்களை நோக்க வேண்டும் என்பதையும் ஈழநாடு தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றது.

யாழ்ப்பாண சந்திப்பு தொடர்பான செய்தியின் அடிப்படையில் மீண்டுமொரு முறை அதனை நாம் குறித்த ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தியிருந்தோம். அதே வேளை கஜேந்திரகுமார் **13** ஐ, ஏறுக்கொள்ள முடியாதென்று, இந்திய வெளிவிவகாரச் செயலருக்கு முன்னால், அழுத்தம் திருத்தமாக தெரிவிப்பதில் எந்தவொரு தடையும் அங்கிருந்திருக்கவில்லை. ஆனால், அவரோ ஏனைய கட்சிகள் பேசுவது போன்று பொதுவாக ஒற்றையாட்சி தொடர்பில் மட்டுமே பேசியிருப்பதாக அவரே ஒப்புக் கொண்டிருக்கின்றார். இது ஏன் என்னும் கேள்வியையே நாம் முன்வைத்திருந்தோம். சூழ்நிலைகளை விளங்கிக் கொண்டு மூடிய அறைகளுக்குள் செயல்பட முடியுமென்றால் ஏன் பொதுவெளிகளில் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட முடியாது?

இந்த விடயத்தில் ஒருவருக்கு ஒருவர் பொதுவெளிகளில் மோதிக் கொள்ளாமல், விடயங்களை ஒற்றுமையுடன் எதிர்கொள்ள வேண்டும் என்னும் ஓர் ஆலோசனையாகவே “யார் வல்லரசுகளின் முகவர்கள்” என்னும் எள்ளல் விமர்சன முறைமையை கையாண்டிருந்தோம். எள்ளல் பாணியில் விடயங்களை விமர்சிக்கும் ஒரு முறையும் உண்டு.

ஈழநாட்டின் ஆசிரியர் தலையங்கம் என்பது ஈழநாட்டின் அரசியல் நிலைப்பாடாகும். ஈழநாடு எந்தவோர் அரசியல் கட்சி அல்லது அரசியல்வாதிகளையோ முதன்மைப்படுத்துவதில்லை. மக்களின் நலனுக்கு எது அவசியமென்று நாம் கருதுகின்றோமோ, அவற்றையே எமது ஆசிரியர் தலையங்கத்தின் ஊடாக வெளிப்படுத்திவருகின்றோம். மக்களின் நலன் ஒன்றை தவிர வேறு எந்தவொரு விடயத்திற்கும் ஈழநாடு முக்கியத்துமளிக்காது. அரசியல் கட்சிகள் பல நிலைப்பாடுகளை கொண்டிருக்கலாம். அது அவர்களின் பிரச்னை. ஆனால், மக்களின் நலனில் நின்றே அனைத்தையும் ஈழநாடு நிறுத்துப் பார்க்கும். இதன்போது குறித்த அரசியல் கட்சியின் நிலைப்பாடு இன்றைய சூழலில், மக்களுக்கு உகந்ததல்ல என்று நாம் கருதினால், அதனை வெளிப்படுத்த தயங்கமாட்டோம்.

அதேவேளையில் -

தனக்கேயுரித்தான இறைமையின் அடிப்படையில், தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட, ஒரு கூட்டாட்சி (சமஷ்டி) முறைமை உருவாக்கப்பட வேண்டும் என்ற தமிழ்த்’தேசிய இனத்தின் வரலாற்று நிலைப்பாட்டை ஈழநாடு நிராகரிக்கின்றது என்றோ,அல்லது அந்த நிலைப்பாட்டிலிருந்து தமிழினம் பின்வாங்க வேண்டும் என்று பரப்புரை செய்கின்றது என்றோ அர்த்தமல்ல. தமிழ் தேசிய இனத்தின் அரசியல் ஆன்மாவையே ஈழநாடு எப்போதும் பிரதிநிதித்துவம் செய்யும். தனது அதியுச்ச, இறுதி இலக்கை அடையும் வரை, இலங்கைத் தீவில் தமிழ் தேசிய இனம் தன்னை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதே ஈழநாடு ஏட்டினது அக்கறையும் நிலைப்பாடும் ஆகும்.

**- ஆசிரியர்.**

## 20 வயதுக்கு...

பணிப்பாளர் நாயகத்தால் எழுத்து மூலமான வழிகாட்டல்கள் சுற்று நிருபமாக வெளியிடப்பட்ட பின்னரே இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

“இரு சினோபார்ம் தடுப்பூசிகளையும் பெற்றவர்களுக்கே பூஸ்டர் டோஸ் வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டம் அடுத்த வருடம் ஆரம்பமாகும். முதலில் **60** வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் டோஸ் வழங்கப்படும். அதன் பின்னரே **20** வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படும்”, என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## ‘ஈழநாடு’...

ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவுடனான சந்திப்பின்போது வலியுறுத்தியதாக தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கும் நலன்களுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் வட, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்றும் இந்திய வெளியுறவுச் செயலரிடம் எடுத்துரைத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

“தமிழர்களின் பிரச்னைக்கு **13** ஆவது திருத்தத்தின் ஊடாகத் தீர்வை வழங்க வேண்டும் என்பதே இந்தியாவின் நீண்டகால நிலைப்பாடாக இருந்துவருவதாக இதன்போது தெரிவித்த இந்திய வெளியுறவுச்செயலர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, அதனை எதிர்வருங்காலங்களிலும் தொடர்ந்து வலியுறுத்துவோம் என்று குறிப்பிட்டார். மறுபுறம் இந்திய வெளியுறவுச்செயலருக்கும் கூட்டமைப்பிற்கும் இடையிலான சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடகங்களின் வாயிலாக அறிந்துகொண்டோம்.

அதன்படி நாம் கூட்டமைப்பிலிருந்து விலகுவதற்கு **11** வருடங்களுக்கு முன்னர் எம்.கே. நாராயணன் இலங்கை வந்தபோது வலியுறுத்தப்பட்ட அதே விடயங்கள்தான் இப்போது மீண்டும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு, தமிழ்த்தேசியத்தைப் புறக்கணித்து, தமிழர்களின் அபிலாசைகளைக் கைவிடுகின்ற கூட்டமைப்பின் போக்கு மீண்டும் மீள உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஒற்றையாட்சியின் கீழான தீர்வை நிராகரிக்கின்ற பொறுப்பு தமிழ் மக்களின் கைகளிலேயே இருக்கின்றது. கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கததினால் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு, அதில்**13**ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டு, ஒற்றையாட்சியின்கீழ் தீர்வை வழங்குவது குறித்த சர்வசன வாக்கெடுப்பில் மக்கள் அதற்கு எதிராக வாக்களிக்க வேண்டியது அவசியமாகும் என்று தெரிவித்தார்.

மேலும் கருத்து வெளியிட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம், “இந்திய வெளியுறவுச் செயலருடனான எமது சந்திப்பின் போது பேசப்பட்ட விடயங்களுக்குப் புறம்பான தகவல்களை அடிப்படையாகக்கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் “ஈழநாடு“ பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கமொன்று எழுதப்பட்டிருக்கின்றது.

**13** ஆவது திருத்தத்தின் ஊடாகத் தமிழ்மக்களுக்கான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று வெளியுறவுச்செயலர் வலியுறுத்தியபோது அதனை நாம் மறுக்கவில்லை என்றும் யதார்த்த அரசியலை விளங்கிக்கொண்டு, ஏனையோரைப் போன்ற முகவர்களாக செயற்படுகின்றோம் என்றும் பொருள்படும்வகையில் அந்த ஆசிரியர் தலையங்கள் எழுதப்பட்டிருக்கின்றது. இதுகுறித்து நாம் அப்பத்திரிகையின் உரிமையாளர் மற்றும் ஆசிரியருக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்” எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

## சீனாவுடனான...

கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

அரசாங்கத்தின் திட்டமிடல்கள் பிரகாரம் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாவிட்டாலும், அனைத்துத் தப்பினரதும் அர்ப்பணிப்பினூடாக, கோவிட் தொற்றொழிப்புக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க முடியும். தடுப்பூசி ஏற்றலுடன், புதிய பொதுமைப்படுத்தலை நோக்கி நகரக் கிடைத்த வாய்ப்பைப் புறக்கணிக்காது இலக்குகளை வெற்றிகொள்வது அனைவரதும் பொறுப்பென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மாவட்ட செயலாளர்களுடன் நேற்று இடம்பெற்ற காணொலி தொழில்நுட்பத்துடனான கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் பொருளாதாரத்தை வழிநடத்துவதற்கு, அரச சேவையின் செயற்றின் மிக முக்கிய காரணியாகிறது. அதனால், எதிர்வரும் காலங்களில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, முழு அரச இயந்திரமும் அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் செயற்படவேண்டும். இதில், மாவட்ட செயலாளர்களுக்கு மிகப் பெரிய பங்கு காணப்படுகிறது என, ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

## தென்மராட்சியில்...

அன்ரிஜென் பரிசோதனை மூலமும், மூவர் பி. சி. ஆர். சோதனை மூலமும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் இருவர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களாவர். (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனிவான் வீதி, சுழிபுரம் என்ற பகுதியைச் சேர்ந்த **19** வயதுடைய இளம் பெண்ணே உயிரிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியாசலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அதேபோல, உயிரிழந்த நிலையில் அடையாளப்படுத்தப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட ஆண் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## உயர்தர...

வித்துள்ளார்.

பாராளுமன்றில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பாடத்திட்டங்கள் நிறைவுச் செய்யப்படாமல் இருப்பதாலேயே பரீட்சைகளை ஒத்தி வைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது. கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் பரீட்சைகள் நடைபெறும் புதிய திகதிகள் தொடர்பான இறுதி முடிவு வரும் நாட்களில் அறிவிக்கப்படும்”, அவர் கூறினார். (ஐ)

## வடக்கு ஆளுநராக...

பார் என்று தெரிய வருகின்றது.

ஜீவன் தியாகராசா தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நியமிக்கப்பட்டிருந்தார். இதற்கு முன்னதாக **1984**ஆம் ஆண்டு முதல் அரச சார்பற்ற அமைப்புக்களில் பணியாற்றினார். மனித உரிமைகள் செயல்பாட்டாளரான இவர், மனிதாபிமான நிறுவனங்களின் கூட்டமைப்பு (Consortium of Humanitarian Agencies) என்ற அமைப்பையும் நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, புதிய ஆளுநர் நியமனம் தொடர்பில் தனக்கு எந்த அறிவித்தலும் கிடைக்கவில்லை என்று தற்போதைய ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் சார்ள்ஸ் அறிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

### பாராளுமன்றம், மாகாண சபைத் தேர்தல்களை

# விகிதாசார முறைமைப்படியே தொடர்ந்து நடத்த வேண்டும்!

### தெரிவுக்குழு முன்னிலையில் மக்கள் காங்கிரஸ் வலியுறுத்து

**கொழும்பு, ஒக்.08**

**அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பின ருமான ரிஷாத் பதியுதீன், கட்சியின் தவிசாளர் அமீர் அலி, சிரேஷ்ட பிர தித் தலைவர் சட்டத்தரணி என்.எம்.ஷஹீட், சட்டத்துறைப் பணிப்பாளர் ருஷ்தி ஹபீப் ஆகியோர், தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் நேற்று கலந்துகொண்டு தேர்தல்கள் சீர்திருத்தம் சம்பந் தமாக மக்கள் காங்கிரஸ் கட்சியினுடைய பிரேரணையை முன்வைத்தனர்.**

அதன் அடிப்படையில், அவர்கள் மிக முக்கியமாக பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள் ளூராட்சி சபைத் தேர்தல் விடயங்களிலே கட்சியின் நிலைப்பாட்டை இங்கு வெளிப்படுத்தியதுடன், விரிவான நீண்ட நேர கருத்தாடல்களையும் மேற்கொண்டனர்.

இதன்போது, நாடாளுமன்றத் தேர்தலையும் மாகாண சபைத் தேர்தலையும் விகிதாசார முறைமைப் படி, தற்போது நடைமுறையில் உள்ளவாறு நடத்தப்பட வேண்டும் என்ற வாதங்களும் மக்கள் காங்கிரஸ் கட்சியி னரால் அங்கு முன்வைக்கப்பட்டன.

அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும், ஆரம்ப காலத்திலே இருந்த விகிதாசார முறைமைப்படியான தேர்தல் முறையையே கடைப்பிடிக்க வேண்டும் என் றும், இப்போது இருக்கின்ற உள்ளூராட்சி சபைத் தேர் தல் முறைமை நாட்டுக்கு உகந்தது அல்ல என்றும் அங்கு தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், பெண்களுக்கான பிரதிநிதித்துவம் வழங் கப்பட வேண்டும் என்பதோடு, விசேடமாகப் புலம்பெயர்ந் தவர்களினுடைய வாக்குரிமை தொடர்பில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்ற விடயம் தொடர் பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அதி விசேடமாக, வடக்கு மாகாணத்திலிருந்து 1990ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டு, புத்தளம் உள்ளிட்ட இதர மாவட்டங்களிலே வாழ்ந்துவரும், அதாவது இன்னும் தமது சொந்த ஊரிலே குடியேறு வதற்கான வசதி வாய்ப்புகள் இல்லாதவர்களுக்கும், விசேட சலுகை அடிப்படையில், அவர்கள் தங்கியிருக் கும் மாவட்டங்களில் உள்ள முகாம்களில் இருந்தே, அவர்கள் விரும்பிய தமது சொந்த மாவட்டத்தில்



வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளும் இந்தத் திருத்தத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும், ஏதாவது புதிய மாற்றங்கள் தேர்தல் சம்பந்த மாக செய்யப்பட வேண்டுமாக இருந்தால், அந்தத் தேர் தல் மாற்றங்கள் ஒரு பொதுவான, நியாயமான அடிப் படையிலே நடத்தப்பட வேண்டும். குறிப்பாக, பழைய முறைமையிலே அந்தத் தேர்தலை நடத்துகின்ற போது, அதற்கு நீங்கள் சமர்ப்பிக்கின்ற பிரேரணையை ஒத்த பிரேரணையை, எவ்வாறு அந்த வாக்கு பிரயோகிக்கப் பட வேண்டும் என்பதற்காக, இன்னுமொரு வாக்குச் சீட்டைக் கொடுத்து, அதாவது நியூசிலாந்து முறைப்படி அல்லது ஜேர்மன் முறைப்படி மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இந்தத் கருத்தாடலை சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் நெறிப்படுத்தினார். (இ)

## "இலங்கையை சர்வதேசம் ஏன் எதிர்க்கிறது?"

கொழும்பு, ஒக். 08

"அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள், இறுதிப் போர்க்காலத்தில் போரை நிறுத்தி புலிகளின் தலை வர் பிரபாகரனை அழைத் துச் செல்ல முயற்சித்த போது அதற்கு இலங்கை அரசு அனுமதிக்காமை யாலேயே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங் கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் செயல்படுகின் றன."- இவ்வாறு அரச தரப்பு எம்.பி. எஸ்.பி.திஸா நாயக்க தெரிவித்தார்.

பிரபாகரனைக் காப் பாற்றும் சர்வதேசத்தின் முயற்சிகளைத் தோற் கடித்துவிட்டு இலங்கை இறுதிப் போரை வெற்றி கொண்டது. இதனா லேயே அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இலங்கை மீது கோபத்தில் இருக்கின்றன. இதனாலேயே ஐ.நா. மனித உரிமைகள் சபை யில் இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் செயல் படுகின்றன" - என்றும் அவர் பாராளுமன்றத்தில் நேற்று குறிப்பிட்டார்.(இ)






## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 - 09-1957 | 04 -10-2021 |

### கனகசபை தங்கராஜா
**(ராசன்)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை தங்கராஜா 04.10.2021 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கனகசபை-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கோபாலசிங்கம் - பத்மாவதி தம்பதியரின் அன்பு மரு மக னும், ரஜனி அவர்களின் அன்புக் கணவரும், துஷ்யா, அருண், அனுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், தனேஸ்வரன் அவர்களின் அன்பு மாமனாரும், கிருபாவதி, லோகாம்பிகை, இந்திராணி, வரதராஜா, காலஞ்சென்றவர் களான பற்குணராஜா(கணக்காளர்- தபால்திணைக்களம், இலங்கை), சோதிமலர், புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற சிவகுமாரன் மற்றும் இராஜா, லலிதா, துரைராஜா, தர்சினி, விக்னேஸ்வரன், பத்மினி, வசந்தி, திவாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

நிகழ்வுகள்

பார்வைக்கு
Saturday, 09 Oct 2021 6:00 PM - 9:00 PM
Sunday, 10 Oct 2021 12:30 PM - 1:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Get Direction
Sunday, 10 Oct 2021 1:00 PM - 2:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Sunday, 10 Oct 2021 3:00 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்புகளுக்கு:
**ரஜனி (மனைவி)**
**+16476331165**

தகவல்:
**குடும்பத்தினர்.**









இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலனகள்-
சிவஸ்ரீ.கு.வை.க வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர் இந்து குருமார் அமைப்பு



07.05 மணி : உளவியல் கருத்து-உளவள
துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன்
சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-
மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-தூங்காவனம்,இங்க
என்ன சொல்லுது
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்-
நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்
- ஆசைகள்



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்
பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள்
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை
நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(யாழ்ப்பாணம்)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : ழுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்